# காரைதீபம் தந்த ஞானதீபம்

(கோவளப் பெருந்துறையைச் சிவப்பெருந்துறையாக்கி
வைத்த ஞானமுனி, சைவ சித்தாந்த கலங்கரை தீபம்,
காரைதீபம் சைவஉலகிற் களித்த ஞானதீபம்,
சுவாமி முருகேசப்பெருமான் பற்றிய கட்டுரை.)

ஆசிரியர்

**மேருபுத்திரி**

## நூல் விளக்கம்


- நூலின் பெயர் : காரைதீபம் தந்த ஞானதீபம்
- ஆசிரியர் : மேருபுத்திரி
- பொருள் : சைவ பக்தி இலக்கியம்
- முதற்பதிப்பு : 2017
- அச்சு : 12 புள்ளி
- அளவு : 1/8 டெம்மி
- பக்கம் : 72


- Publisher & Copyright : **Dr Mayuranathan,**
  41 Macleod Road,
  London N21 1SW, UK.
  E-mail : mayura_nathan@hotmail.com



அச்சிட்டோர்:

**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**

- 176, கீழ வீதி, சிதம்பரம் - 608 001. ✆ : 04144 - 223020, 223040
- 39, மில்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
  ✆ : 044 - 26401531, 42769087
- 3,4,5, காமராஜ் நகர், புத்தகரம், கொளத்தூர், சென்னை - 600 099.
  ✆ : 044 - 65656587, 7373333068
  E-mail : sabanayagamprinters@gmail.com

உ
சிவமயம்

கைவல்யதவம் ஓங்குக காரைதீப ஒளியெங்கும் ஓங்குக,
சைவசமயம் ஓங்குக சைவசித்தாந்த நெறி ஓங்குக,
சைவநீறும் சிவநாமமும் ஓங்குக, சைவத்தமிழ் ஓங்குக
மைவளர் கண்ணி மீனாட்சியின்று வாழும் காரைதீபமெங்கும்
என்றும் ஓங்குகவே.

காரைதீபத்தின் வித்தியாகுருவும், ஞானகுருவுமாய் விளங்கிய சுவாமிஜியின் முழுச்சரித்திரமும் அடியேனுக்குத் தெரியாது. எனினும் காரைதீபத்தின் ஞானச் செய்தியாகச் சுவாமிஜி வீற்றிருந்ததை (ஞானச்செய்தியாக அறிந்திடா விடினும்) மக்கள் கூட்டம் ஏதோவொரு வழியில் அறிந்திருந்தனர்.

அக்காலத்தில் கூட்டம் அலைமோதியதென்பதும் உண்மையே, அடியேன் கண்டதும், கேட்டதும் சிறிதளவே. எனினும் சிவபூமியாம் பரதகண்ட மொடிலங்கையின் சுதந்திரம் மற்றும் சைவ சித்தாந்த ஸ்தாபனம் என்பவற்றிற்காகத் திருவவதாரம் செய்த சுவாமிஜியைப் பேண விரும்புவோர், புகழை விரும்பாமல் இலைமறை காய்போல் வாழ்ந்த அந்த ஞானியின் பெயரை நிலைநாட்டினாலன்றோ சிவபூமியும், சைவ உலகமும் கடைத்தேறும்.

எனவே, சிவபூமியாகும் பரத கண்டமும் இலங்கையும், சைவஉலக மக்களும் உணர்வு பூர்வமாகச் செயற்பட வேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றேன். இதில் கேட்டெழுதப்பட்டவை சில மாறியிருக்கக்கூடும். அதைத் திருத்தியெழுத உதவுவோர் முன்வரவும்.

வணக்கம். நன்றி.

**மேருபுத்திரி**

ஊமன் கண்வாட்டிக் காமன் கண்ணிலிருந்து மீட்டி
வாமன் கண்காட்டிச் சோமன் தாள் மலர் நெஞ்சில்
நாட்டிட அஞ்ஞானம் நீக்கி மெய்ஞ்ஞானத்தைப்
பிரசாதித்தருளி அடிநாயேனை உய்வித்தருளிடக் கோவளப்
பெருந்துறையைச் சிவப்பெருந்துறையாக்கித் திருவீழியின்
கீழ்வீற்றிருந்த வாமன்கண் கொண்ட சிவஞானியாம்
**ஆலவாய்க் குருமணி சுவாமி முருகேசப் பெருமானின்**
திருவடி மலர்களுக்குச் சமர்ப்பணம்.

*மேருபுத்திரி*



உ

சிவமயம்

**மேருபுத்திரி**

சிவபூமியாம் இலங்கை

# முன்னுரை

சிவம்

மேன்மைகொள் சைவநீதியை முழங்குவன சிவாகமங்களாகும். சைவசமய நூல்களாக வேதங்களும் ஆகமங்களும் விளங்குவன. எனினும் உயிர்கள் முத்தியடையும் நெறியை முழங்குவன சிவாகமங்களே. கைலாசபதி திருப்பெருந்துறையில் ஞானகுருவாகி வந்து மணிவாசகப் பெருமானுக்குச் சிவாகமங்களை உபதேசித்தருளியமை யாவருமறிந்ததே. மணிவாசகப் பெருந்தகையார் அந்த உபதேசத்தையுள்ளெடுத்துத் திருவாசக மழையாகப் பொழிந்தருளினார். ஞான திருவாசகம் பெண்களும் முத்திபெறுந்தகைமையைக் கூறும் திவ்விய ஞானநூலாம்.

திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், திருவன்னைப்பத்து என்னும் பதிகங்கள் பெண்களை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டவையாம். பெண்ணுயிர்களும் முத்திபெறும் உரிமையைச் சுட்டிக் காட்டித் தனது ஞானவாசகத்திற் பேசியுள்ளமை தெளிவாம். திருவண்ணாமலையில் தான் கண்ட தபோதனிகளைப் பொருளாக வைத்து திருவெம்பாவைப் பதிகம் பாடியருளியமை நோக்கற்பாலதாம்.

இதுகாறும் ஆணடியார்கள் தோன்றி ஆணடியார்களை அறைகூவியழைத்துச் சிவநெறிக்கு வரும்படி வழிகாட்டினர். மணிவாசகப்பெருமானின் திருவாசகப் பெருமை, அதனுள்ளும்

பெண்ணுயிர்களும் முத்திபெறுந் தகுதியுடைமை என்னு மிரண்டு நோக்கங்கள் தில்லைநடராஜப் பெருமானால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை இறைவன் தன் கைப்பட எழுதிய சங்கதியே உலகிற்குணர்த்துவதாம். எனவே, பெண் களும் முத்திநிலை கூடலாம் என்பதுமீங்குறுதியாம். இறைவன் முன்பு, ஆணுயிர் பெண்ணுயிர் எனும் பேத மில்லை; ஈங்குயிர் பசுவெனப்படும். ஆண்பெண் பேதம் கன்மபேதத் தோற்றமாம். உயிர்கட்கு முத்தி பெறும் உரிமை இறைவனால் வழங்கப்பட்ட வெகுமதி. உலகியற் பொருட் களில் வைக்கும் அன்பை இறைவன் திருவடியில் வைத்து விட்டால், பேரின்பமன்றோ. ஈங்கு யான் பெற்ற பேரின்பம் எந்தப் பெண்ணாலும் பெறமுடியும்.

சைவசித்தாந்த சிவஞானியாம் மணிவாசகரைப் போன்று ஆலவாய்க் குருமணி சுவாமி முருகேசப் பெருமானும் சைவசித்தாந்த ஞானியாம். எவ்வுயிரும் ஈடேறவேண்டும் என்னும் இரங்குகருணைகொண்டவர்கள் சிவஞானிகள். அருட்சத்திரூபமாம் ஞானாசிரியரதும், மீனாட்சியம்பாளினதுங் கட்டளைப்படி வழிநடத்தல்படி எழுதப்பட்ட நூல்கள் பெரும்பாலும் பெண்ணடியார்களை முன்வைத்துப் பாடப் பட்டதாம். சைவசித்தாந்த ஞானியாம் மணிவாசகர் தனது திருவாசக நூலில் சைவசித்தாந்த உண்மைகளையே வெளிப்படுத்திப் பாடியுள்ளமை போலவே, சைவ சித்தாந்த வுண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு எழுந்தவையே இந்நூல்களாம். இறைவன் அடியெடுத்துத் தந்ததும் கந்த புராணத்தில் ‘‘உமைதவம்’’ எனுந் தலைப்பையேயாகும். எனவேதான் புராணங்களிலிருந்து பெண்கள் வழிப்பட்டுய்ந்த முறைமை இப்பிரபந்தங்களிற் பேசப்பட்டதாம். கோயிற் புராணம், கந்தபுராணம், திருவாசகம், தேவாரத் திருமுறைகள், திருவிளையாடற் புராணங்களிலுள்ள சங்கதிகள் இப்பிரபந்தங் களின் தோற்றமாய் அமைந்ததாம்.

சிவபெருமானால் சிருட்டிக்கப்பட்ட இவ்வுலகில் சிவபெருமானால் சிருட்டிக்கப்பட்டு வாழ்கின்றவுயிர்கள் சிவபெருமானால் சிருட்டிக்கப்பட்ட சைவசமயத்தின் மேன்மையை, உயிர்கட்கு முத்திநெறி காட்டும் உண்மையைத் தெளிந்து திருவருள் கூடும், கூட்டும் வழிவந்துய்யும் பொருட்டும் எழுதப்பட்டதாம். முன்பு பலகோடி சன்மங்களி லியற்றிய தவப்பயனால் பெற்ற சிவானந்தவமுதை, ஏனைய பெண்களுடன் பகிர்ந்துண்ணும் விதமாகவும் பாடப்பட்டதாம்.

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க இந்நூல்களை வெளியிடுவதற்கு முன்னின்றுதவிய திரு து. சிறீதரன், திரு பொ. மயூரநாதன், திரு ச. யோகநாதன் ஆகியோர்க்கும்; நூல்களைப் படித்து பிழை திருத்தம் செய்தும் வாழ்த்துரையும் தந்துதவிய முனைவர் இரா. பாலகிருஷ்ணன், அணிந்துரை எழுதியுதவிய முனைவர் T.N. ராமச்சந்திரன் அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல்களை அச்சிற்பதித்து தைப்பூசத்திருநாளில் தில்லை நடராஜரின் திருவடியிற் சமர்ப்பிக்க உதவிய சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர், உதவியாளர்கட்கும்; தாய்நாட்டில் எனக்குறு துணையாக, உதவியாக இருந்த உறவினர்கட்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவம்

*மேருபுத்திரி*

**Sekizaar Adi-p-Podi**
**Dr. T.N. RAMACHANDRAN**
5D, Selvam Nagar
Thanjavur, Tamilnadu

# அணிந்துரை

இலண்டன் அன்பர் சிவஸ்ரீ யோகநாதன் அவர்கள் மேருபுத்திரி அவர்களின் நூல்களை நான் பார்வையிட்டு ஓர் அணிந்துரை வழங்கவேண்டும் என்று பணித்தார்.

மேருபுத்திரி ஒரு புனிதவதியாகக் காட்சி அளிக்கின்றார். அவரது நூல்கள் அனைவரின் பயிலுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியது. திருமுறைகளிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும் அவருக்கு அமைந்திருக்கும் தோய்வும், ஆர்வமும் வெள்ளிடைமலை. அகண்ட பாரதத்தின் மரபு, பண்பு ஆகியவற்றை இறையருளால் காக்க விழைவோர் வரிசையில் அவர் முன்னிடம் பெற்றுள்ளார்.

காலம் பொன்னானது. அதை விரயம் செய்தல் பாவம். நாலடியாரில் ஒரு பாடல் :

*வைகலும் வைகல் வரக்கண்டும் அஃது உணரார்*
*வைகலும் வைகலை வைகும் என்று இன்பு உறுவர்*
*வைகலும் வைகல் தம்வாழ்நாள்மேல் வைகுதல்*
*வைகலை வைத்து உணராதார்.*

வாழ்க்கையை எண்ணியறிதல் வேண்டும். பதுமனார் கூறு வதாவது : ''எண்ணி அறிதலாவது, பிறந்தது முதலாகப் பத்து வயது இளமையும், இருபது வயதில் வளர்ச்சியும், முப்பது வயதில் ஒளியும், நாற்பது வயதில் மேதைமையும், ஐம்பது வயதில் பலமும், அறுபது வயதில் தாதுவும், எழுபது வயதில் கண்ணும், எண்பது வயதில் செவியும், தொண்ணூற்றில் மனமும், நூற்றில் பிராணமுமாக அடைவே ஒழுகக் குறைந்தும், பஃபத்திலே இக் குறைவு தோன்றி வருகின்றமையை யுணராதார் என்றவாறு.''

மின்னி நிலையில மன்னுயிர் வாழ்க்கை. ஆகவே, பயனில சொல்லுதலும், பல சொல்லக் காமுறுதலும் தவறாகும். ஆகவே காலத்தின் மதிப்பை உணர்ந்து செயல்படவேண்டும். அப்பர் அடிகள் இன்னம்பர் தேவாரம் சாற்றுவதாவது :

*''தொழுதுதூமலர் தூவித் துதித்து நின்று*
*அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்*
*பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்*
*எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே''*

நம் திரிகரண அசைவு ஒவ்வொன்றையும் ஈசனார் பின்னக் கணக்கோடு பதிவு செய்திடுவார். தமிழின் பின்ன எண்ணங்கள் யாவை என்றுகூட யாரும் அறியவில்லை. அவையிற்றின் மகத்துவத்தை ஆரம்பக் கல்வி மாணவர் அறிந்திருத்தல் வேண்டும் என்ற ஆர்வத்தால், ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் தாம் வரைந்த, பாலபாடம் - நான்காம் புத்தகத்தின் பின் இணைப்பில் தந்துள்ளார். அதிலிருந்து சிலவற்றைக் கீழே தருகின்றேன்.

கீழ்வீசம் $= \frac{1}{5,002}$ ; கீழ் ஒருமா $= \frac{1}{6,400}$ ;

கீழ்முக்காணி $= \frac{1}{25,600}$ ; கீழ்அரைக்காணி $= \frac{1}{51,200}$ ;

கீழ்முந்திரி $= \frac{1}{1,02,400}$ ; இம்மி $= \frac{1}{10,75,200}$ ;

அதிசாரம் $= \frac{1}{18,38,400}$ .

இம்மி என்பது இன்றும் வழக்கில் உள்ளது. பொருள் அறியாமலேயே இது பயன்படுத்தப் படுகின்றது.

மேருபுத்திரியாரின் நூல்களில் 'தில்லைச் சிதம்பர விலாசம்' என்ற நூல் இடம் பெற்றுள்ளது. இதில் 'பொன்னார் மேனியனே' என்று தொடங்கும் பாடல் நம்பிஆரூரரின் பாடலையும், 'அரிது அரிது' என்று தொடங்கும் பாடல் ஔவையாரின் பாடலையும், 'தானே வந்து' என்று தொடங்கும் பாடல் திருவாசகத்தையும், ஏனைய பாடல்கள் போற்றத்தக்க ஞானநெறியினையும் நினைவூட்டி, நம்மை சிலிர்க்க வைக்கின்றன.

அம்மையாரின் ''கோயில் ஒருபா ஒருபஃதும் பதிகங்களும்'' சிவானந்தம் பயிற்றுகின்றது. சிவ நடனக் காட்சியை நம் கண்முன் காட்டுகிறது.

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் ஒளிர பாடுபடுபவர் நம் அம்மையார். எழுத்து வளம் கைவரப் பெற்ற அவர் எளிமை யின் எல்லையில் பிரதிஷ்டை பெற்றுள்ளார். 'ஏழையேன் ஏதுஞ் செய வல்லனோ' என்று இந்நூலில் பதிவு செய்திருக்கும் அவர், ''எல்லாம் நின் செயலே'' என்றும் கூறியுள்ளார். இடம்பம் என்பது அவரிடம் எள்ளளவும் இல்லை.

தில்லை என்பது, ''நல் உயிர் எல்லாம் நல்அருள் பெற்றிட' நாட்டிய அருள் தலம் என்று அறிவிக்கின்றார். தூய உள்ளமே திருத்தில்லை. இத்தலம் என்பது சிவசக்தியின் பீடம். பாலுண் குழவி பசுங்குடர் பொறாது என்று நோயுண் மருந்தை தாய் உண்டாங்கு என்றபடி, சிவானந்தத்தை உயிர்கள் தாங்கும் பொருட்டு மட்டுப்படுத்தி நடராஜனின் பக்கலில் இருந்து அருள்பாலிக்கும் சிவகாமியின் பேரருள் இங்கு இயங்குகின்றது. சிவன் அருளால் தான் சிவனை வணங்க ஒல்லும். சிவகாமியே இதற்குச் சாட்சி. 'சிவலோகம் காட்டும் சிற்றம்பலமே' நாம் பெற்றுள்ள பெரும் பேறு.

'காரை தீபம் தந்த ஞானதீபம்' என்ற நூல் அம்மையார் அருளிய நூல்களில் அமைந்துள்ளது. யாழ்தீவகத்தின் மேற்குக் கரையோரத்தில் வீற்றிருந்து சிவபூமியாம் பரத கண்டமொடு இலங்கையைத் தனது ஞானவொளியினால் காத்தருளிய ஞான தீபத்தின் ஞானப்பிரகாசத்தை பேசுகின்ற நூல். ஞானதீபத்தின் பெருமையை அம்மையார் உரைநடையில் கீர்த்தித்திருக்கிறார். இவ்வற்புத நூலைப் படித்தால் பரவசம் விளையும்.

'சோமசுந்தர ஆலாசியம்' அம்மையாரின் நூல்களில் இடம்பெற்றுள்ள ஒரு திப்பிய நூல்,

*'குழையார் காதினர் கொன்றைத் தாரினர்*
*பிழையா சாமமே பாடி யாடுவார்*
*அழையாது நுழைந்து அகமே தங்கினார்*
*உழைக் கையினார் உரமிது'*

பதிவாகி உள்ளது இந்நூலில். இதை ஏற்றுவோம்; போற்றுவோம்.

'வியன் தில்லைச் சிதம்பரம்' என்ற திப்பிய கிரந்தம் நூல்களை அலங்கரிக்கும் ஒரு பெரிய, அரிய நூல். இது துகளறு

போதமாய்த் துலங்குகின்றது. இவ்வொரு நூல் 15 பனுவல்களின் தொகுப்பு. குறள் வடிவிலும், வெண்பா வடிவிலும், சிந்து வடிவிலும், விருத்தப்பா வடிவிலும் பல பாக்கள் உள. இத்தொகுப்பில் இறைவனை தரிசிக்கலாம். வேதாந்த, சித்தாந்த சாரமாய் இத்தொகுப்பு அமைந்துள்ளது.

அம்மையாரின் நூலுள் ஒன்றான ‘மதுர விலாசம்’ அதிமதுரமாய் உள்ளது. ‘அங்கயற்கண்ணி பிள்ளைத் தமிழ்’, ‘திரு ஆலவாய் சொக்கலிங்க மாலை’, ‘கண் பாருமையா’ என்ற மூன்று நூல்கள் இத்தொகுப்பில் ஒளிர்கின்றன. இவற்றை ஓதுவார் வியந்து அலறுவர்; நயந்து உருகுவர்.

‘ஆலவாய்க் கண்ணி’ அம்மையாரின் நூல்களுள் ஓர் அற்புதப் பனுவல். பவன் பிரமசாரி; பால்மொழி கன்னிகை. இப்பால்மொழிக் கன்னியின் சிவத்தேன் அருளை அமுத மொழி யில் வடித்துத் தந்திருக்கும் இந்நூலின் பெருமையை ஆயிர நா கொண்ட சேட விசேடனும் இதன் பெருமையை எடுத்துரைக்க முடியாது. தாயுமானவரின், அம்மையப்பரின் அருட்பிரசாதமே இந்நூல். ஓத ஓத உள்ஒளி பெருக்கும் இந்நூல் ஒப்பற்ற உமையின் அருள் போற்றி நிற்பது.

அம்மையாரின் நூல்களில் இடம்வகிக்கும் ‘திருஆலவா யிரட்டை மணிமாலையும் பதிகங்களும்’ உயிரைச் சிலிர்க்க வைக்கும் அருட்பதிகம். இதை ஓதுவார் சிவப்பித்து கொள்வர்; மகோன்மத்த நிலை உறுவர்.

அம்மையார் சொல்லுராய்ந்து எழுந்த தீயின் சுடர் எழக் கனிந்த நாவுடையார், மண் மாசு அகன்ற வான்படு சொற்கள் கொண்டு சிவாந்தரங்கமான பனுவல்கள் வரைபவர். வேத ஆகம இதிகாச புராண சாத்திர தோத்திரச் சாரமாக அருளி யிருக்கும் கீர்த்தியைப் போற்ற நான் ஆர்? இவருக்கு இணையான அனுபூதிமான் இவ்வுலகில் இல்லை. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

ஓம் தத் சத்.

சைவ ஊழியன்

சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரன்.

**முனைவர் இரா. பாலகிருஷ்ணன்**
ஓய்வுபெற்ற மொழியியல் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# வாழ்த்துரை

இவ்வையகத்தார் வாழ்வாங்கு வாழ மனித சமூகங்கள் வெவ்வேறு இறை நம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றன. வாழ்க்கை நெறிமுறைகள் இறைநம்பிக்கைக்கு ஏற்ப வரை யறுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில்தான் வெவ்வேறு இனக் குழுக்களாக வாழ்ந்து வந்தவர்கள், பல ஆயிரம் மொழிச் சமூகங் களாகப் பிரிந்தபின்னரும் இறைநம்பிக்கை என்னும் பொதுப் பண்பின் கீழ்பலவிதமான மதக் கோட்பாடுகளைத் தோற்றுவித்தனர். இவற்றுள் மறுசீராக்கம் பெற்றவை சில, மறைந்து போனவை பல. இவ்வாறு பரிணாம வளர்நிலையடைந்து காணப்படுபவை இந்து, புத்தம், கிறித்தவம், இஸ்லாம் என்பன என்று கொள்ளலாம். இம் மதக்கோட்பாடுகளில் இந்து மதமே காலத்தால் முந்தையது. இதன் ஆணிவேர் இந்தியாவில் தோன்றியுள்ளது என உறுதிப் படுத்தலாம். ஏனெனில், இந்து மதம் மட்டுமே இயற்கை நிகழ்வு களாகிய தோன்றுதல், தோன்றியவை காக்கப்பட்டு வளர்தல், வளர்ந்தவை அழிதல் என்னும் மூன்று நிகழ்வுகளின் அடிப்படை யில் அமைக்கப்பட்டுள்ளது. மனிதகுலத் தோற்றத்தின் மூலகாரணி லிங்கம்; மனித உருவாக்கத்தின் காவலறையே தாய்மையெனுங் கருவறை; கருவறையிலிருந்து வெளிவந்த மனிதன் அழிவது, அவன் எதிர்கொள்ளும் இன்னல்களாலும் அவன் பெறும் இன்ப நிலைகளாலும் என்னும் உண்மையை உணர்ந்ததன் அடிப்படை யில் தோன்றியதே இந்துமதம் அல்லது சைவமதம் அல்லது சைவ சித்தாந்தம். மற்ற மதங்களாகிய புத்தம், கிறித்தவம், இஸ்லாம் என்பன மனிதன் தோன்றியபின் அவன் எதிர்கொள்ளும் இன்னல்கள் களையப்பட்டு, இன்பநிலை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையில் தோன்றியவை.

இவ்வாறு, உலகில் முதன்முதலில் தோன்றிய இந்து மதம் காலப்போக்கில் சிவலிங்கச் சித்தாந்தமாகவும் சிவசக்தி வழி

பாடாகவும் மாற்றமடைந்துள்ளது. இப்படிப்பட்ட இந்து மதத்தின் உயரிய சைவ நெறிகளை முற்றுமுணர்ந்த மகான்கள் நூற்றாண்டுகள்தோறும் தோன்றி, உலகோர் உய்யும் வழியைக் காட்டி வந்துள்ளனர். இவர்களுள் யாழ்பாணத் தீபகற்பத்தரு கிலுள்ள காரைத்தீபத்தில் வாழ்ந்து, சமாதியடைந்த சுவாமி முருகேசப்பெருமாள் அவர்கள் வணக்கத்திற்குரியவராக உள்ளார். சைவமத இறையருளால் அதிசயிக்கத்தகுந்த அற்புதங்கள் பலவற்றைச் செய்து காட்டித் தன்னை அண்டிவந்தோர்க்கு உய்யும் வழிகாட்டியாக வாழ்ந்தவர் இன்று அனைவரும் போற்றி வணங்கும் தெய்வமாகத் திகழ்கிறார். இவரது ஆசிரமத்தில் வாழும் பெண்ணடியார்களுள் தலைசிறந்த தவச்செல்வி **மேருபுத்திரி** ஆவார். சைவ சித்தாந்தத்தில் இவருக்கு இருக்கின்ற ஆழமான ஞானம் என் போன்றோரை வியப்பில் ஆழ்த்துகிறது. அதன் விளைவாகவே இவரது நூல்களுள் பல சைவசித்தாந்தத்தை அலசி ஆராய்ந்து விளக்குமுகமாக அமைந்துள்ளன. இவரது ஆழ்மன வுணர்வு சைவ நீதியை உலகெங்கிலும் பரப்புவதாக அமைந்துள்ளது. அதன் வெளிப்பாடே பக்திப் பரவசங் கமழும், தங்கள் கைகளில் தவழும் இந்தத் துதிப்பாடல்கள் மற்றும் சைவசித்தாந்த விளக்கங்கள் அனைவராலும் பாராட்டத் தகுந்தவைகளாக உள்ளன. எனது வாழ்த்துக்கள்.

தவமங்கை மேருத்திரி அவர்களது படைப்புக்களைப் படிக்கின்ற வாய்ப்பு பெற்றதைப் பெரும் பேறாக் கருதிச் சைவநீதி உலகெங்கும் பரவிடவேண்டுமென, இவர் எடுக்கும் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

தவச்செல்வி மேருபுத்திரி அம்மையரது நூற்களை இந்த அழகியவடிவில் வடிவமைத்துத்தந்துள்ள சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர் தம்பி திரு. கௌதம சங்கர், தங்கச்சி திருமதி ஜெயநந்தினி தம்பதியருக்கும், அச்சக ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அன்புடன்

*இரா. பாலகிருஷ்ணன்*

தூத்துக்குடி
10-01-2017



## விநாயகர் காப்பு

‘‘நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம்
கற்குஞ்சரக்கன்று காண்’’

*(திருவருட்பயன்)*

ஒருகை முகத்துரி போர்த்த வனீய்ந்த
ஒருகை முகந்தான்பாதந் துணை.

## குரு வணக்கம்

அண்டருக் கரியாய் போற்றி அடியவர்க்
கெளியாய் போற்றி
தெண்டிரைசூழ் காரைதீபம் வாழவந்த
மண்மேல் நடந்தாய் போற்றி
கண்டனக்கினிய திருமேனி காட்டியென்
சென்னியின் மீதில்
முண்டகத் திருத்தாள் வைத்த ஞானகுருவே
போற்றி போற்றி.

‘‘ஞானகுருவே ஞானமும் கல்வியும்
ஞானகுருவே யாமறி தெய்வமும்
ஞானகுருவை நாநவின்று ஏத்துமே
ஞானகுருவே நன்னெறி காட்டுவரே’’

கணபதி துணை

சிவம்

# 1

யாழ்த்தீபகற்பத்தின் மேற்குக் கரையோரப் பகுதியில் தீவுக்கூட்டங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் தலைசிறந்து விளங்குவது காரைதீபமாகும். சுண்ணக் கற்களாலும், பவளப் பூச்சிகளாலும் சூழப்பட்ட இத்தீவு, காரைச்செடிகள் நிறைந்து விளங்கியதன் காரணமாகவே இத்தீவிற்கு இப்பெயர் வரக் காரணமாயிற்று.

இமாசலன் மகள் பார்வதி அம்மையாரின் திருக்கல்யாணத்தின் போது திருக்கல்யாண தர்சனத்தின் பொருட்டால், இமாசலப் பிரதேசத்துக்கு எப்புவனத்தி லிருந்து யாவரும் வந்து கூடிய பொழுது இமயமலை நடுங்கியது. வடபால் தாழவும் தென்பால் எழுந்தது. உடனே தேவர்கள் ''சிவனே சிவனே'' என்றோலமிட்டனர். இதைக்கேட்ட சிவபெருமான் 'அஞ்சற்க' என்றருளி, அகத்தியரை யழைத்துத் தென் பொதிகையில் இருக்கும்படிக் கட்டளை யிட்டருளினார். அதற்கிணங்க அகத்தியரும் தென் பொதிகை யிலமர்ந்திருந்தார். அதன் பின்னர் சிவபூமியாம் இலங்கையை யும் தர்சிக்க விரும்பிக் காரைதீபத்தில் பர்ணசாலை அமைத்துத் தங்கியிருந்தார். அப்பொழுது தன்னைத் தரிசிக்கவந்த இந்திரனுக்குக் காரைச்செடியின் இலைகளைச் சேர்த்துக்களி கிண்டிக் கொடுத்து உபசரித்தார் என்பது ஐதீகம்.

இத்தீவின் வடகரையின் கண் ஒருகலங்கரை விளக்கம் நெடிதுயர்ந்து வானளாவி நிற்கிறது. பெருஞ்சமுத்திரத்தில் கொடிய அலைகளால் எற்றுண்டு, வயிறு வளர்க்க மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு இந்த விளக்கு ஒளிகாட்டிக் கரையைத் தொட உதவி செய்வதுபோல், பிரபஞ்சம் எனும் பெருஞ்சமுத்திரத்தின் மத்தியில் பிறவியில் சிக்குண்டு

இருவினையெனும் கொடிய அலைகளால் எற்றுண்டு தத்தளிக்கும் உயிர்களுக்கோர் கலங்கரை விளக்காய், சுவாமிஜி திகழ்ந்ததை உலகமறியும்.

கோவளக் கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்தின் அயற்பகுதியில் ''ஞானவொளியே ஒளியாய் விளங்கு சிவஞான தீபமாம்'' சுவாமி முருகேசப் பெருமான் பிறவிப் பெருங் கடலில் தத்தளித்து அலைந்துலையும் மானிடப் பிறவிகளைப் பிறவித் துயரிலிருந்து கரையேற்றிச் சைவசித்தாந்தம் எனும் அருமருந்தூட்டி முத்திநிலைக்கு ஏற்றி வைக்கும் பொருட்டு ஏகாந்த நலமெலாம் புசித்தபடி கடற்கரையில் பர்ணசாலை அமைத்து வெண்மணலைச் சிவலிங்கமாக்கி, கோயிலமைத்து, தெய்வீக வைத்தியாலயமாகவும், சைவசமய நெறியை வளர்க்குங் குலமாகவும், சைவசித்தாந்த முறையை நெறிப் படுத்திச் சைவஉலகிற்கோர் ஞானானந்த தேசிகனாய், உலகெங்கும் ஞானவொளி வீசிவிளங்கினார்.

இலங்கைத் தீவின் சிரசு யாழ்ப்பாணம் எனுந் தீபகற்பம், இந்த யாழ் தீபகற்பத்தின் முன்சிரசாகக் காரைதீபமும், முன்சிரசின் சிரோமணியாகச் சுவாமியும் வாழ்ந்து வருங் காலத்தே சிரோமணியின் ஒளியால் கவரப்பட்ட தீபகற்பத்தின் மக்கள் தொகையோ அனந்தம். பூவுலகம் வாழவும், சைவசித்தாந்தம் வாழவும் தவமுனியாயிவர் கோவளத்தில் வீற்றிருந்தார். கலியுகத்தில் கலங்கித் தவிக்கும் சைவத்தையும் தமிழையுங் காக்கக் கருதிக் கதிர்காம முருகனே (சுவாமிஜி) இம்முனிவராகத் தோன்றினார். ஞானஸ்வரூபியன்றோ முருகன்.

எனவே மேலைநாட்டவரின் கோரப்பிடியில் சிக்கித் தவித்த சிவபூமியைத் தனது ஞானநோக்கினால் நோக்கி அங்கிருக்கும் அஞ்ஞான இருளையகற்ற வேண்டிக்கோண்டபடி (பூமியிற்றோன்றமுன்பு) விதவாவிவாகம், வர்ணாச்சிரம முறை களைத் தாண்டிய குற்றத்தை, தாண்டவைத்த குற்றத்தை

நீக்கிவைக்கும் முகமாகச் சுவாமிஜி காந்தியினீமக் கடமைகளில் பங்குபற்றி நீக்கிவைத்தார் என்பதாம்.

அடியார்களின் மாயாமலங்களறுத்து, அதனால்வரும் நோயிடர்கள் தீர்த்துத் திருநீறெனுமருந்தூட்டி வந்தார். இஃதோர் ஞானச் செய்தியாம். மேலைத் தேசத்தவரின் வருகையால் சிவபூமியாகும் பரதகண்டமொடிலங்கைவாழ் சைவசமயம், மக்கள் படுமிடர்களுக்கிரங்கிய கைலாசபதி சிவபூமியை மீட்டெடுப்பதற்காகப் பூமிக்கனுப்பி வைத்தார். கலியுகத்தில் வர்ணாஸ்ரம தர்மங்கள் தலைதடுமாறுவதே கலியுக தர்மம். இந்தத் தர்மத்தின் நெறிக்குட்பட்டே காந்தி முனிவரும் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

மேலை நாட்டவரின் வருகையாற் சிவபூமி பட்டபாடும் கெட்டகேடும்தான் நாம் முதலிற் பார்க்கவேண்டும். சைவசமயக் கலாச்சாரங்களைப் பிடுங்கியெறிந்தனர். யானை குளங்களைக் கலக்கியது போல, மேனாட்டார் சைவ சமய நெறிகளையும், திருக்கோவில்களையும், சைவ சமய மக்களின் மேலான வாழ்க்கை முறைகளையும், அதற்கு மேலாக அவர்களின் செல்வத்தைக் கொள்ளையிட்டுக் குழப்பிய சந்தர்ப்பத்தில், காந்திமுனிவர்க்கு மக்களை ஒன்றுபடுத்துவது கல்லில் நாருரித்தல் போலானது.

முற்காலத்தில் ஐம்பத்தாறு தேசங்களுடன் கூடிய பரதகண்டத்தைத் துண்டாக்கியதுடன், இந்திய முஸ்லிம் வேற்றுமையை, சாதிப் பிரச்சினைகளையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தனர் மேனாட்டவர். எனவேதான் காந்திமுனிவர் ‘‘பெருநெருப்புக்கு ஈரமில்லை’’ யெனும் பழமொழிக்கிணங்க சைவநெறி முறைகளைத் தாண்டி நின்றே போராட்டத்தை முன்னெடுத்தவர். வர்ணாஸ்ரம தர்மத்தை மீறிய பாவத்தைக் கழிப்பதற்காக முருகப் பெருமானின் அவதாரமான சுவாமி முருகேசப் பெருமான், காந்தி முனிவரிறந்த பின்னர் கடமைகள் செய்து பாவத்தைக் கழுவி வைத்தாரென்பது

ஞானச் செய்தியாகும். காந்தி குடும்பத்தாரின் குல வழக்கின் படியும் கடமைகள் நடந்தது யாவரும் அறிந்ததே.

இவர் பிரித்தானிய ராணியைச் சந்தித்து நாட்டின் சுதந்திரத்தைப் பற்றிக் கதைக்கப் புறப்படும்பொழுது சுவாமிஜி காந்தியைச் சந்தித்துப் புறப்படுமுன்னர் தன் கையினால் திருநீற்றுக் காப்பிட்டு விபூதியுடன் (நெற்றியில்) போனால்தான் சித்திக்கும் என்று கூறியனுப்பினார். அதுபோல சுவாமியின் சொற்படியே காந்தியும் தீருநீற்றுக்காப்புடன் சென்று வெற்றி பெற்றமை ஞானச் செய்தியாகவும், இந்தியா இலங்கை சுதந்திரம் பெற்ற சரித்திரச் செய்தியாகவும் பதிவு செய்யப் பட்டது.

சிவபூமியாமிலங்கையொடு இந்தியாவும் சுதந்திரம் பெற்றவுடன் காந்திமுனிவனின் இவ்வுலக வாழ்வின் நோக்கம் கைகூடவும், அவர் இவ்வுலகைவிட்டு விலகும் காலமும் நெருங்கவே, சிவபூமியின் மீட்சிக்காகத் திருவவதாரம் செய்த சுவாமிஜியும் சூசகமாகக் காந்தி முனிவனுக்கு அறிவித்திருந்தார். அதாவது Dr. J.C. குமரப்பாவிற்குத் தந்தி போலத் தபால் (அல்லது தபாலட்டையோ நன்றாக நினைவில்லை) விதானையார் அருளம்பலத்திடம் கொடுத்துப் போடுவித்தார். அதன்பின்னர் காந்தி சுடுபட்டிறந்தார்.

காந்தியின் இறுதிக் கடன்கள் நடந்தபோது சுவாமிஜியும் கலந்து கொண்டபின்னர், காந்தியின் அஸ்தியில் ஒருபகுதியை இலங்கைக்கு எடுத்துவந்து வைரவக்கடவுளின் பாதுகாப்பில் (இன்றும் உள்ளது) வைக்கப்பட்டது. சிவபூமியாம் பரதகண்டமொடிலங்கையின் சுதந்திரத்திற்காகக் கைலாய பதியினால் அனுப்பப்பட்ட காந்தியின் அஸ்தி இவ்விரு நாடுகளிலும் சுவாமிஜியின், காந்தியின் மகன் தேவதாஸ் காந்தியின் இஷ்டப்படித் தெய்வ சம்மதத்துடன், தெய்வ ஆக்ஞையுடன் வைக்கப்பட்டுள்ளது. இதே தெய்வ ஆக்ஞை

யுடன் ஆறு தசாப்தங்களின் பின்னர் இச்செய்தியானது பரகசியமாக்கப்பட்டது.

Dr. J.C. குமரப்பா சுவாஜியின் ஆச்சிரமத்திற்கு விஜயம் செய்தவர்களுள் ஒருவர். சுதந்திரகட்ட காலத்தில் வாழ்ந்த காந்தி, J.C. குமரப்பா, தேவதாஸ்காந்தி, வல்லபாய் பட்டேல், திரு. ராஜேந்திர பிரசாத், திரு. முன்ஜி வேறும் திரு. V.V. கிரி போன்றவர்கள் சுவாமிஜியுடன் நெருங்கிய நட்புடையவர்கள். இவர்களுள் J.C. குமரப்பா, திரு.V.V. கிரி ஆகியோர் சுவாமிஜியின் ஆச்சிரமத்திற்கு விஜயஞ் செய்தவர்களாவர். J.C. குமரப்பாவின் Blood pressure எனும் நோயை முற்றாகக் குணப்படுத்தி வைத்தருள் செய்தவர் சுவாமிஜி. கடற்கரையில் ‘‘குமரப்பாமால்’’ என்றழைக்கப்பட்டு வந்ததை நாங்களறிவோம்.

சுவாமிஜியின் பாதச்சுவடு கடற்கரையில் பதிந்தமை சுவாமிஜியிடம் அருளாசி பெறச்சென்ற யாங்கள் எல்லோரும் அறிவோம், ஆனால் சுவாமிஜி சொல்லுவார். ‘‘குமரப்பாவின் பாதச்சுவடுகள் இந்தக் கடற்கரையில் பதிந்துள்ளது’’ என்று செந்தில்நாதன் என்பவர்க்குக் கூறியதாக அறிந்தேன். J.C. குமரப்பா ஆச்சிரமத்திற்கு வந்து தங்கிய காலத்தில் அன்று ஆச்சிரமத்திலிருந்த விசாலாட்சி அம்மையார், இவருடைய பிள்ளைகள் நால்வரின் உதவியுடன் சுவாமிஜியின் கட்டளைப்படி விருந்தோம்பல் செய்தார்.

இவர்கள்தான் சுவாமிஜியைப் பேணி வந்தவர்கள். இதன்பின்னர் இந்திய பாகிஸ்தான் யுத்தம் நடந்தது. மேற்கூறிய செய்திகள் யாவும் காதால் கேட்டவைதான். ஆனால், இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தின்போது சுவாமிஜியின் ஆச்சிரமத்தில் யானும் தங்கியிருந்தேன். இனிக் கூறும் செய்திகள் யாவும் கண்ணால் கண்டவையே. இந்திய - பாகிஸ்தான் யுத்தம் ஆரம்பமானவுடன் இந்தியாவுக்கு வெற்றி யுண்டாக வேண்டும் என்று ஆசீர்வதித்தார். அதன்பின்னர் தர்ப்பையெடுத்து பூசையில் வைத்து பூச்சாத்தி 10 நாட்கள்

பூசை நடாத்தினார். அந்தப் பத்து நாட்களுக்குள்ளே (10 நாளும் பூர்த்தியாகுமுன்னரே) இந்தியாவுக்கு வெற்றியுண்டாகி விட்டது.

தான் பூசை பண்ணினதுமன்றி ஒவ்வொரு நாளும் எங்களுக்கு ஆங்கில வகுப்பு நடாத்தும்பொழுது இந்தியாவின் வெற்றிக்காகச் சிறிதுநேரம் சீடப்பிள்ளைகள் எல்லாரும் மௌனப் பிரார்த்தனை செய்யும்படிச் செய்தபின்னர்தான், ஆங்கில வகுப்புவைத் தொடங்கி வைப்பார். இலங்கைத் தமிழருக்கு இயற்கையாகவே இந்தியா தாய்நாடெனும் பற்றிருக்கும் காரணத்தால், நாங்களும் முழு மனத்துடனும் ஆர்வத்துடனும் பிரார்த்தனை செய்தோம். இதில் ஒரு ஞானச் செய்தியும் பின்னணியில் உண்டு.

ஆலவாய் சோமசுந்தரப் பெருமான் சுவாமிஜியின் ஆச்சிரமத்தில் தனக்கிடம் தருமாறு கேட்டுத்தானே வந்து வீற்றிருந்தார். அதனால் சுவாமிஜியின் பூசையை ஆலவாய் சோமசுந்தரப் பெருமான் ஏற்றருள் புரிந்தார். ஆலவாய் சோமசுந்தரப் பெருமான் சுவாமிஜியின் ஆச்சிரமத்தில் வந்து வீற்றிருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. கோயில்கள் பூமியில் அசௌசப்படுவதனாலும் சிவபூமியின் மீட்சிக்காக சுவாமிஜி திருவவதாரம் செய்ததாலும், சுவாமிஜியைத் தானே பூமிக் கனுப்பி வைத்ததனாலும், சிவபூமியில் சிவநீறு, சைவசமயம், சைவசித்தாந்தம் நிலை நாட்டப்பட வேண்டிய காரணங் களாலும், கோவளத்துறை சிவப்பெருந்துறையாக வேண்டிய கட்டாயத்தினாலும், அம்மை மீனாட்சியுடன் கூடிவந்து வீற்றிருந்தார். இன்றும் அம்மை மீனாட்சி அங்கு உலாவி வருவதை எவரும் அறியமாட்டார்கள்.

இதனாலன்றோ சுவாமி தனது பாடல்களில் ''மடம் செய்த பேறு கோவிலுக்கில்லை'' என்றுபாடியிருக்கிறார். இந்த ஞானச்செய்தி சுவாமிஜியுடன் இருந்த ஒரு சிலருக்குத்தான்

தெரியும், 1940-ல் ‘‘ஆலவாய் ஆச்சிரமம்’’ தொடங்கினார். வெளிச்சவீட்டு பங்களாவில் முதலில் இருந்துவிட்டு 1944-ம் ஆண்டளவில்தான் மால்போட்டார். தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்னும் ஞானநிலையில் எட்டு, வருடமிருந்த பொழுது ஆச்சிரமம் தொடங்கினார். ஆச்சிரமம் தொடங்க முன்பு வடஇந்தியாவிலிருந்து இலங்கை வரையுமான சிவபூமியின்கண் யாத்திரை செய்தவர். சிவபூமியாம் பரத கண்டத்தில் யாத்திரை செய்யும்பொழுது இந்தியப் பெருந் தலைவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார்.

சுவாமிஜி சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லவர். எனினும் சமஸ்கிருதமும் தமிழும் அவர்க்கு இருகண்கள். சிதம்பரமும், மதுரையும் மிக, மிகப் பிரீதியான ஷேத்திரங்கள். மற்றத் தீருக்கோயில்கள் மிகப் பிரீதியானவை. சுவாமிஜி அடிக்கடி எனது உயிர் இந்தியா விலும், உடல் இலங்கையிலும் இருக்கின்றது என்றே கதைப்பதை நாங்கள் கேட்டிருக்கிறோம். சமஸ்கிருதம் எழுதிப்படிக்காமல் இயற்கையாகவே உணர்ந்தவர். மற்றிரு மொழிகளைப் போல் ஆரம்பக்கல்வி கற்காமல் இயற்கையறிவுடன் பொருந்தி இயற்கையாய் உணர்ந்தவர்.

எனது தாத்தா கோர்ட்டில் Fiscal பதவி வகித்தவர். அக்காலத்தில் சுவாமிஜி Editor-ஆக வேலை பார்த்தவர். இவர்களிருவருமங்கே சிநேகிதமானார்கள். இந்தச் சிநேகிதமே பிற்காலத்தில் எமது வாழ்வை நல்வழியிற் செலுத்தியது. முற்பிறவிகளாயிரமாயிரம் பிறவிகளிற் செய்த தவத்தினால் சுவாமிஜியினவதார மகிமையையுணர்ந்திடவும், ஞானகுருவை யடையவும் வாய்ப்புண்டானது. சுவாமிஜி தனித்திரு, பசித்திரு, விழித்திரு காலத்தில் தாத்தாவுடன் வாழ்ந்தவர். (தாத்தா வீட்டில்) இக்காலத்தில் எனது தாயார் சித்திமார் சுவாமிஜியின் மடியில் வளர்ந்தவர்கள்.

எனது தாயார் சுவாமிஜி சொற்படிக் குழந்தைப் பருவத்திலிருந்தே புராணம் படிப்பது வழக்கமாம். இது நிற்க, சுவாமிஜியின் தெய்வீக சக்தியினால் அம்மம்மா, இரண்டு பெரியம்மா, எனது தாயார், சித்திமார் எல்லோரும் கவரப்பட்டார்கள். இதைக் கண்ணுற்ற தாத்தா மனகிலேச மடைந்தார். எல்லோரும் சாமியாராகி விட்டால் என் செய்வது என்பதே அவர் கவலை. இதை வெளிக்காட்டாமல் தாத்தா யோசனையிலாழ்ந்தார்.

சுவாமிஜிக்கு இது ஞானத்தினால் தெரியவந்தவுடன் தாத்தாவிடம் ''நீயொன்றுக்கும் பயப்படத் தேவையில்லை, நாகேஸ்வரியம்பாள் உன் குலத்திற்றோன்றுவாள்'' என்று கூறி இனி ''நான் வெளிக்கிடலாம்'' என்றுங் கூறி வெளியேறினார். தாத்தாவின் ஒரு மகளே மறுபிறப்பில் விசாலாட்சியம்மையாரின் மூத்த மகள் ஜெகதாம்பிகையாகப் பிறந்தாரென்று எமக்கு சுவாமிஜி கூறியுள்ளார். எனது பாட்டனாரின் (தொழில் பார்க்கும்பொழுது துறவறத்தின்முன்) சிநேகிதராயிருந்ததால் நாம் சிறுவயதில் கோவளக் கடற்கரைக்குப் போவது வழக்கம். அந்தச் சிறுவயதில் துறவு, ஞானம், ஞானி, தவம் என்பதெல்லாம் அறியாத பருவம். கடற்கரையையும், வெளிச்சவீட்டையும், பார்க்கப் பாட்டனாருடன் செல்வது வழக்கம். இன்னொன்று, யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குக் கார்ச்சவாரியே எனக்குப் பெருமின்பமாயிருக்கும். அந்தக் காலத்தில் ஆச்சிரமத்தில் விசாலாட்சியம்மை யாரும் அவருடைய பிள்ளைகளும் பொன்னாலைச் சைவப் பெண்ணொருவரும் இருந்தனர். அவர்கட்கு சுவாமிஜி சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், கணக்கு கற்பிப்பதைக் கண்டிருக்கிறோம்.

இங்குக் கூறவேண்டிய முக்கியவிடயம் என்னவெனில் சுவாமிஜி வெளிச்சவீட்டு பங்களாவிற்கருகில்தான் முதன் முதலில் இருந்தாரென்று கேள்விப்பட்டேன். அங்கு அவர்

ஆண்சீடர்களை வைத்து ஆங்கிலம், கணிதங் கற்பித்தார் என்றும், காரை தீபத்திலுள்ள எல்லோரும் அறிந்து தமது பிள்ளைகளையனுப்பினார்கள் என்றும் மொத்தத்தில் காரை தீபத்தில் கணித, ஆங்கில பாடங் கற்பிக்க (இலவசம்) வேறெவரும் இருக்கவில்லையென்பதே சத்தியம். ஆனால் சீடப்பிள்ளைகளையும், பொதுமக்களையும் சுவாமிஜி சேர்த்துக் கொண்டதெல்லாம் தனித்திரு, பசித்திரு, விழித்திரு எனும் மோனநிலை கடந்தபின்னரே. அந்த மோனநிலையிலமர்ந் திருந்த காலத்தில் பொதுமக்கள் போய்ப்பார்த்துத் தர்சித்து வந்தார்கள். அந்தப் புண்ணியவான்கள் ஒருவரும் இப்போது உயிருடன் இல்லையென்பது வருந்தத் தக்கவிடயம். ஒருவருடனும் கதைத்து விடயம் அறியமுடியவில்லையே.

சுவாமிஜியிடம் கல்வி கற்றவர்கள் எல்லோரும் பிற்காலத்தில் ஆசிரியர்களாயினர். முதன் முதலில் ஆண் களையே தனதாச்சிரமத்தில் சீடராக்கிக் கொண்ட சுவாமிஜி பிற்காலத்தில் பெண்களையமர்த்திக் கொண்டார். தக்கன் தான் முதலில் பெற்ற ஆயிரம் புதல்வர்களும், இரண்டா வதாகப் பெற்ற ஆயிரம் புதல்வர்களும் நாரதருடைய உபதேசத்தினால் மோட்சம் நாடித் தவம் செய்தனரேயன்றித் திரும்பி வரவில்லை. இதனால் வெகுண்ட தக்கன் ஆண்களை நம்பலாகாவென்று பெண்பிள்ளைகளைப் பெற்று வளர்த்தான்.

சுவாமிஜி ஆண் சீடர்களை வைத்து வளர்த்துப் பாடமும் சொல்லிக்கொடுத்து வளர்த்து வந்தும், அவர்கள் படித்து ஆளாகிப் பிரபஞ்ச வாழ்க்கையில் குதித்தனரேயன்றிச் சுவாமியையோ அன்றி ஆச்சிரமத்தையோ நினைத்துப் பார்க்க வில்லை. சுவாமிஜியின் இருமகன்மாரும் இதற்குளடங்குவர். இவர்கள்தான் இப்படியெனில் ஆச்சிரமத்திற்கு வரும் பெரியவர்களும் குடும்பஸ்தர்களாதலால் ஆச்சிரம நெறிக்குட் பட முடியவில்லை.

ஒருவருடைய உதவியுமின்றி சுவாமிஜி இருந்த காலத்தில் விசாலாட்சியம்மையார் தன் மகன் சிவகுருநாதனுடன் தஞ்சமடைந்து ஆச்சிரமத்துப் பொறுப்பை சுவாமிஜியின் கட்டளைப்படி ஏற்றுக்கொண்டார். இதன்பின் முற்பிறவிகளில் செய்த நற்றவத்தினால் விசாலாட்சியம்மையாரின் பெண் பிள்ளைகள் மூவரும் தாயின் வழியைப் பின்பற்றத் தலைப்பட்டார்கள்.

கோயிற் திருவிழா (ஆச்சிரமத்தில் நடக்கும் நித்திய அபிஷேக பூசைகள்) நடாத்த உதவி தேவைப்பட்டபொழுது சுவாமிஜி அம்பாளின் உத்தரவுப்படியும், தாயார் விசாலாட்சி யம்மையாரின் சம்மதத்துடனும், அந்தப் பெண்பிள்ளைகளின் பூரண விருப்பத்துடனும் ஆச்சிரமத்துள் அனுமதிக்கப்பட்டுப் பெண்கள் ஆச்சிரமம் ஆக்கினார்கள். பிற்காலத்தில் சுவாமிஜி ''இனி பெண்களையே நம்பலாம் என்றும் அதிலும் லட்சம் பெண்களில் ஒருத்திதான் நம்பிக்கைப் பாத்திரம்'' என்றும் கூறியிருக்கிறார்.

பெண்களாச்சிரமம் என்று தொடங்கிய பின்பு எந்த ஆண்சீடர்களையும் ஆச்சிரமத்துள்ளே வாங்கப்படவில்லை. இங்கு விசாலாட்சியம்மையாரின் மகன் சிவகுருநாதன் மாத்திரந் தான் தங்க முடிந்தது. தக்கனின் ஆண்பிள்ளைகள் இரண்டாயிரம் பேரும் சிவமாயையால் கவரப்பட்டுத் தவஞ்செய்து முத்தி யின்பம் பெற்றார்கள். சுவாமிஜியிடம் வந்த ஆண்சீடர்கள் பிரகிருதிமாயையால் கவரப்பட்டு பிரபஞ்ச இன்பத்தை நாடிச்சென்று விட்டனர். இதன்பின்னரே தனியே பெண் களின் ஆச்சிரமம் என்றாகியது. 1970 அளவில் வெளிச்ச வீட்டு ஆச்சிரமத்தை பிடுங்க வேண்டியநிலை ஏற்பட்டது.

கடற்கரைப் பர்ணசாலையில் பெண்பிள்ளைகள் இருந்த போது, வெளிச்சவீட்டிற்கு இராணுவத்தினரின் தலையீடு அடிக்கடி நிகழவே சுவாமிஜி அவ்விடத்தை விட்டு எழும்பி, கடற்கரையோரமாகத் தெற்குநோக்கி நகர்ந்து கொல்லங்கலட்டி

(இப்பொழுது சுவாமிஜியின் சமாதியிருக்குமிடம்) என்னும் தென்னந்தோப்பில் குடியமர்ந்தார். கொல்லங் கலட்டிக்கு வெளிக்கிடும்பொழுது ''காடோ செடியோ கடற்புறமோ'' என்றொரு பாடலும் பாடியிருந்தார். வெளிச்ச வீட்டுப் பர்ண சாலைக்கு நாங்கள் நான்குதரம்தான் செல்லும் பாக்கியம் கிட்டியது. சிறுவர்களான எமக்கு மோனஞான சுகத்துடன் வீற்றிருக்கும் சுவாமிஜியின் நிலை எட்டாது எனினும் அவரது ஞானஔியானது எங்களைக் கட்டிவைத்ததென்பதைப் பின்னாளில் புரியவைத்தது.

வெளிச்சவீட்டடியில் உள்ள பர்ணசாலைக்கு நாம் செல்லும்போது நான்கு பெண்களிருந்தார்கள். விசாலாட்சி யம்மையாரின் மூன்று பெண்களுடன் பொன்னாலைச் சிற்றம்பலத்தின் மகள் பார்வதியும் இருந்தார். இவர்களை எல்லோரும் ''அக்கா'' என்றேயழைத்து வந்தனர். 1970ம் ஆண்டு சுவாமிஜி கொல்லங்கலட்டிக்கு வந்தபின் செந்தில்நாதன் எனுஞ் சிறுவனை உதவிக்காக ஆச்சிரமத்துள் சேர்த்துக் கொண்டார். கொல்லங்கலட்டிக்கு வந்தபோது விசாலாட்சி யம்மையாரின் மகன் இந்தியாவில் படித்துக் கொண்டிருந்த படியால் உதவிக்கு ஆள் தேவைப்பட்டது. எனவேதான் செந்தில்நாதனை தனக்குதவியாக சுவாமிஜி வைத்திருந்தார். இங்கு வந்தபின்பே பொன்னாலை சைவப் பிள்ளைகள் (பார்வதியின் அக்கா பெண்கள்) சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

அத்துடன் செந்தில்நாதனின் அண்ணன் Dr. மயூரநாதனை வைத்திய சேவைக்காக ஆச்சிரமத்தில் தங்க வைத்துக் கொண்டார். கொல்லங்கலட்டிக்கு வந்த பின்னர் (1971) பிரபஞ்சமென்னும் சேற்றில் கிடந்த நாயிற்கடையேனை முத்திநிலைக்கேற்றி வைக்க தனதுசீடப் பெண்ணாக்கிக் கொண்டார்.

பொய்ப் பிரபஞ்சத்தை மெய்யென்றும், பொய்ச் செல்வத்தை மெய்யென்றும், பொய்க் கல்வியை மெய்யென்றும், பெரு

நிதியம் என்றும் ஏமாந்திருந்த பேதையேனைப் பேதித் தெடுத்து அருள்நலங்கூட்டும் ஞானகுருவானார். அஞ்ஞானந் தீர்க்கும் அருள்நீறூட்டி, எழுகடல் வருவித்துத் தனது சமுத்திர தீர்த்தத் தாலாட்டி ஆணவமலங்கழுவிச் சீவனைச் சுத்தப்படுத்தி யருள் புரிந்தார். சுவாமிஜி கொல்லங்கலட்டியில் இருந்த பொழுது களபூமி நகைக்கடை அம்பிகை பாகன் தனது குடும்பத்துடன் வந்து தீர்த்தமாடிக்கொண்டு திருவிழாக்களில் கலந்துகொள்வது வழக்கம்.

1976ம் ஆண்டு வைகாசிப் பரணியில் சுவாமிஜி சமாதி கூடியபொழுது விசாலாட்சியம்மையாரின் குடும்பம் உட்பட ஒட்டுமொத்தமாக ஏழு பெண்களுடன் சிவகுருநாதன். Dr. மயூரநாதன், செந்தில்நாதன் ஆகிய மூவரும் அங்கிருந்தனர். வெளிவாரியாகக் களபூமி அம்பிகை பாகன் குடும்பம், பொன்னாலை தியாகராஜா குடும்பம், காரை நகர் தெண்டாயுத பாணியின் குடும்பம், கரணவாய் சபாரத்தினம் கமலம்மா குடும்பம் இந்தக் குடும்பங்களைவிட தனிப்பட்ட நபர்களாகச் ''சாமி ஆச்சி'' என்றழைக்கப்படும் சுந்தரம்மா, சுவாமிஜியின் மூத்தமகன் சச்சிதானந்த சிவம், மணற்பிட்டியைச் சேர்ந்த வைத்திலிங்க வாத்தியார், பொன்னாலை வைரவர் கோவிலைச் சார்ந்த ''வீரவான்'' எனப்படும் சிற்றம்பலம் என்பவர்களே நெருக்கமாக இருந்தவர்கள்.

சுவாமிஜி சமாதிகூடிய காலத்திற்கு (1976) முன்பு சில காலமாகவே மோன நிலையிலிருக்கத் தொடங்கிவிட்டார். ஒருசில வசனங்கள் தேவையான பொழுதில் மாத்திரங் கதைப்பார். மற்றப்படி மோனநிலையே. 1976ம் ஆண்டு வைகாசி மாதம் பரணி நட்சத்திர தினத்தில் பிரதோஷ காலத்திலே சுவாமிஜி பூரண சமாதி நிலை கூடினார்.

ஆசிரமவாசிகள் சுவாமிஜியின் சந்நிதியில் கூடியிருப்ப சமாதிகூடும் புண்ணிய காலம் நெருங்கவும் தேஜஸாகிய

உயிரியக்கம் திருவடியிலிருந்து எழுந்து மேலேறிப் பிரமரந்திரம் வழியாகக் கைலையை எட்டியது. இந்த ஞானச் செய்தியை வெளியிட வேண்டிய காரணம் என்னையோவெனில், அண்மை யில் சமாதியை வழிபட அடியேன் சென்றபொழுது சமாதியின் நிலையைக் கண்டு என் வயிறெரிந்தது. என்நெஞ்சில் கவலை குடிகொண்டது. சுவாமியிடம் கல்வி கற்றுய்ந்த சீடர்கள் பலர் இருக்க, சுவாமிஜியிடம் நன்மைபெற்ற காரைதீப மக்கள் பலர் இருக்க, வெளியூர் மக்கள் பலர் இருக்க, சைவ உலகமிருக்க, சிவபூமியாம் பரதகண்ட மொடிலங்கையிருக்க பிரித்தானிய ஆட்சியிலிருந்து சிவபூமியை விடுவிக்கத் திருவவதாரஞ் செய்து சைவத்தைக் காத்த ஞானதீபத்திற்கு ஒருதீபம் வைக்க ஒருவருமில்லையென்ற நிலை. சுவாமிஜி யின் சமாதியில் ஒளியிருக்க வைத்தால் பரதகண்ட மொடிலங்கை சிறக்கும் என்பதே வாஸ்தவம். இதை யார்? எப்போ? உணர்வார்கள்.

சிவம்

# 2

தொன்றுதொட்டுச் சைவசமயம் நலியுங்காலத்தே அதை வளர்க்கும் பொருட்டு கைலாயபதியால் சைவப்பெரியோர்கள் பூமிக்கு அனுப்பப்பட்டுச் சைவத்தையும் தமிழையும் நிலை நிறுத்துவது நியதியாம். சிவாஞ்சைப்படிப் பூமியிலவதரிப்பவர்கள் இல்லறமோ, துறவறமோ அன்றி இல்லறமும் துறவறமுமோ அனுஷ்டித்து தமது அவதார நோக்கைப் பூர்த்தி செய்வதும் பின்னவர்கள் கைலையையடைவதும் வழக்காம். இருசுடர் களாகிய சூர்ய, சந்திரர்கள் கைலாய பதியின் இருகண்களாம். சூரிய சந்திரரின்றியி இப்பூவுலகியங்காது. அதுபோல் கைலாய பதிக்கு வடமொழி (சமஸ்கிருதம்), தென்மொழி (தமிழும்) இரு கண்களாம்.

சமஸ்கிருதமும், தமிழும் சைவத்தின் இருகண்களாம். சைவம் என்பது சிவத்தைக் குறிக்கும் சொல்லாம். எனவேதான் சிவத்தின் இருகண்கள் என்றழைக்கப்படும். தமிழும், சமஸ்கிருதமும் சிருட்டிகாலத்தில் கைலாய பதியால் உயிர்கட்கு தரப்பட்டவையாம். முதன்முதலில் சிவபெருமானாலும், முருகப் பெருமானாலும் அகத்திய மகாமுனிவருக்கு அருளிச் செய்யப் பட்டதென்று புராணங்கள் கூறுகின்றன.

வடநாட்டில் வடமொழியும் (சமஸ்கிருதமும்) தென்னாட்டில் தென்மொழியும் (தமிழும்) வழங்கி வருகின்றமையால் ஆங்காங்கு பெரியவர்கள் தோன்றி சைவத்தையும் சைவத்தின் இரு கண்களாம் சமஸ்கிருத, தமிழ்மொழியையும் வளர்த்து வந்தனர். இவர்கள் கைலாயபதியை மனம், வாக்குக் காயங்களால் வழிபட்டுச் சிவஞானம் பெற்று, அச்சிவஞானத்தின் வாயிலாகச் சிவானுபவம் பெற்று, பெற்ற சிவானுபவங்களைச் செய்யுள் வடிவில் நாயிற்கடையேமாகிய யாமுய்யும் பொருட்டுத் தந்துள்ளனர். ஆசிரமத்தில் பல்லாயிரக் கணக்கான பாடல் களைச் சுவாமிஜி பாடியுள்ளார்.

யாவும் தமிழ் மொழியிலேயே பாடப்பெற்றவை. எம் போலிகளவற்றைப் படித்துய்ய வேண்டும் என்ற கருணை யினால் தனது சிவானுபவத்தையும், சிவஞானத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். உலகியல் வாழ்விலிருந்தும் பக்தி நெறியையறிந்துய்யும் வழிவகைகளை உய்த்துணரும்படி நல்வழிப்படுத்தும் நோக்கத்தையும், முத்திநெறி நாடித் தவஞ் செயும் நன்னெறியைப் போதிக்கும் கருத்துக்களையும் பாடல் களில் வெளிப்படுத்தியுள்ளார். சைவசித்தாந்த ஞானியான சுவாமி நாயன்மார்களைப் பின்பற்றியவர்கள் வந்த வந்த வழியிலே நின்றவராவார்.

பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சாஸ்திரங் களையும் உணர்ந்தவர். திருவாசகம், திருக்கோவையார் என்னுமிரண்டு ஞானாமிர்தத்தைப் பருகிச் சுவைத்தவர். இவர் பாடிய ‘‘வள்ளிக்கும்மி’’ என்னும் பிரபந்தம் திருவாசகம், திருக்கோவையார், சைவசித்தாந்த சாஸ்திரங்களின் சாரத்தைப் பிழிந்தெடுத்து வடித்ததாகும். இந்த வள்ளிக் கும்மியை சைவசித்தாந்த சாகரம் என்று கூறின் மிகையாகாது.

இப்பிரபந்தத்தில் சைவசித்தாந்தங் காட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்கள் பற்றியும், பதிபாசம், பசுக்களின் இலக்கணம் பற்றியும், முத்திநெறிகூடும் ஆன்மாவை வழிப்படுத்தும் பதிபற்றியும், முப்பத்தாறு தத்துவங்கள், பந்தநிலை, முத்திநிலை, ஞானகுருவால் ஆட்கொள்ளப்பட்டு ஞானநெறிக்குச் செல்லுதல், ஆன்மாவிற்கு பதிகுருவாய் வருந்தன்மை, பந்தநிலையிலிருந்த ஆன்மா மும்மலங்களில் இருந்து விடுபடுதல், மூர்த்தி தல தீர்த்தப் பெருமை இன்னும் எத்தனை விடயங்கள் சைவசித்தாந்தத்தில் உண்டோ அத்தனையையும் ‘‘வள்ளிக்கும்மி’’ எனும் பிரபந்தத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

சொக்கலிங்க மாலை, மீனாட்சி பிள்ளைத் தமிழ் என்பன வற்றில் பதி, பாச, பசு இலக்கணங்கள், தவமகிமை, ஞானநெறி, திருவிழாக்கள். அவற்றின் மகிமை, ஆன்மசொரூபம், ஞான நிலை, ஐந்தெழுத்துண்மை, ஐந்தெழுத்தோதுதல், ஞானிகள் நிலை, மாதவரிணக்கம், சிவபூசை. நீற்றின் பெருமை, பதியின் பெருமை, பாசத்தின் தீமைகள், தேவார திருவாசகம் ஓதுதல், கோயிற்றிருத்தொண்டு செய்தல், பதியின் கைமாறற்ற திருவருள், அருட்சக்தி, அருட்சக்தியின் அருள், அருட்சக்தியின் கைமாறற்ற திருவருளானது ஆன்மாவை எடுத்துச் சுமந்து சிவன் திருவடிக்கீழ்க் கொண்டு சேர்க்குந் திறமை, அருள், பெருமை இன்னும் எத்தனையோ கருத்துக்களைத் தெளிவாக இலகு தமிழில் காலத்துக் கேற்றவாறு பாடியுள்ளார்.

தனிப்பாடல்கள் எத்தனையோ ஆயிரம், குறள் சிந்து நடைப் பாடல்கள், வெண்பா, விருத்தம், பதிகங்கள், திருத்தாண்டகம், குறள்வெண்பா, அரகரசிவாயமாலை, பழமொழிகள், திருவாசகம், திருமந்திரம் என்று ஏராளமான பாடல்களை யாமுய்யும்பொருட்டு அருளியிருக்கிறார். சிதம்பரம், மதுரை, கதிர்காமம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் சுவாமிஜிக்கு இனிக்கும் தலங்கள். இருதயமோ ஆலவாய் சோமசுந்தரப் பெருமாளுக்கும், மீனாட்சியம்மைக்கும் வாசஸ்தலம். இறைவனுடனும், இறைவியுடனும் பேசிக்கொண்டு (உரையாடிக் கொண்டு) இருப்பதையும் காணலாம்.

சுவாமிக்குச் செய்யும் எந்தத் திருத்தொண்டும் நூறுவீத மனச்சுத்தமுடன் மனம், வாக்கு காயத்தினால் பக்தி சிரத்தை யுடன் செய்வதையே ஏற்றுக்கொள்ளும் ஞானகுருவாவார். எனவே, தூய பக்தியையும், தூயமனதையும் தனது பாடல் களில் சிறப்பித்துக் கூறியுள்ளார். பலதலங்களுக்கும் பல பாடல்கள் இயற்றியுள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் இவர்களைப் புகழ்ந்து

பாடியுள்ளார். ‘‘நால்வரில்லையேல் சைவ சமயமில்லை’’ யென்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

வாகீசர் துறவையும், பட்டினத்தார் துறவையும் போற்று கின்றார். அடியேனுடைய சிற்றறிவுக்கெட்டியவையேயிவை. இன்னும் புதையல் பொதிந்து கிடப்பதை அறிந்து போற்ற வேண்டியவர்கள் அறிஞர்கள் கடனாம். இதைவிட ஆங்கிலத் திலும் பல உண்டு. இவைபற்றி அடியேன் அறிவேனேயன்றி ஒன்றையும் படித்துப் பார்க்கவில்லை. அவற்றைப் படித்துப் பார்த்தால்தான் என்னவென்பதையறியலாம். தனது சரித்திரத்தைச் சுவாமிஜி ஆங்கிலத்தில் எழுதிவைத்துள்ளார். இவைதவிரக் குறிப்புகள், sayings என ஏராளம் உண்டு.

சிவம்.

# 3

சைவசமயத்தை வளர்க்கத் தோன்றும் பெரியோர்கள் அந்தந்தக் காலத்து யுகதர்மத்தைக் கடைப்பிடித்தொழுகுவது தான் தர்மமென்றுணர்ந்து, அதன்வழி நிற்பர். இவர்கள் எம்போலிகட்குய்யும் நெறிகாட்டும் முறையில் வாழ்ந்து காட்டுவார்கள். எனவே, நாமவர்கள் வாழ்ந்து காட்டிய நெறி யில் நின்றுய்வதெம் கடமையன்றியவர்களை ஆராய்வது பாவச்செயலாய் முடியும். சுவாமிஜி முதல் இல்லறத்திலிருந்து பின் துறவறம் மேற்கொண்டவராம். அவர் மனைவி இறந்ததும் துறவறத்தை மேற்கொண்டவர்.

காரைக்காலம்மையார் என்னும் புனிதவதியார் கணவன் வேறு திருமணம் செய்ததையறிந்ததும் இந்த உலகையும், உடலையும் துறந்து பக்திநெறியிற் குதித்தவர். இவர்கள் இல்லறத்திலிருந்து விடுபட்டுத் துறவறம் மேற்கொண்ட வர்கள். குபேரன்தான் பட்டினத்தாராகப் பிறந்து சைவ சமயத்துப் பெருந்துறவியாக வாழ்ந்து எம்போலிகட்குத் தெளிவு பிறக்க வழிகாட்டியவர். இவர்கள் மூவருக்கும் செல்வம் மலையாய்க் குவிந்திருந்தும் பொய்ச் செல்வமீதென்றுணர்ந்து, இவர்கள் மெய்ச்செல்வமாம் பேரின்பச் செல்வந்தேடிப் பக்திநெறியில் வழுவாதுநின்று ஞானம் பெற்றவர்கள்.

சுவாமிஜி இந்த இல்லறம், துறவறம் இரண்டையும் அவரவர் பக்குவத்திற்கேற்ப அவர்களுக்கு நெறிவகுத்து வளர்த்தவர். தன்னிடம் வந்த எத்தனையோ ஆயிரமக்களுள் ஒருசிலரையே தனதாச்சிரமத்துள் வைத்திருந்தவர். சுவாமிஜி ஒருவரின் முகத்தைப் பார்த்து மூன்று காலமுணர்ந்து கொள்பவர். சுவாமிஜி எமக்குச் சொன்னவை.

''ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு புற்று. (கறையான் புற்று), புற்றைத் தட்டிப் பார்த்தால் பாம்பு வெளிவரும்.

ஆனால், நல்லபாம்பு எந்தப்புற்றில் இருக்கும் என்று தெரியாது. பாம்பு வெளிவந்தால்தான் நல்லபாம்பு எங்கிருக்கிறதென்று தெரியும். நல்லபாம்பைக் கண்டுபிடிக்கும் வழியிதுதான்'' என்று கூறுவார். ''காலம் மூன்றும் கருத்தில் உணர்ந்தாலும் ஞாலந்தனக்குரையார் நல்லோர் பராபரமே'' என்று தாயுமானவர் கூறியிருக்கிறார். சுவாமிஜி முகத்தைப் பார்த்துச் சாதக, பாதகங்கள் கூறுவதை யறிந்தவர் சிலரே.

இவர்களில் சில ராணுவத் தலைவர்கள் கூட தாம் மணக்கவிருக்கும் பெண்களின் படங்களைக் காட்டிக் கேட்டதாக அறிந்திருக்கிறேன். சுவாமிஜியைத் தர்சிக்கவரும் நம்மவர்கள் சிலர் கேட்டுக் கொண்டவர்கள், சுவாமிஜியைப் பற்றிக் கேள்விப்பட்டுக் காரை தீபத்திற்கு வெளியே இருந்து வந்தவர்களுள், கேட்டவர்களும் உண்டு. சிலர் தமக்குச் சொல்லும்படி சுவாமியைக் கேட்பார்கள். கேட்காமலேயிருக்கும் சிலருக்கு அவர்களுடைய, வாழ்க்கையைப் பற்றி விலாவாரி யாகக் கூறிவிடுவார். சிலருக்கு அளவாகச் சொல்லுவார். அதெல்லாமவரவர் காலத்தைப் பொறுத்ததாம்.

பிரபஞ்ச சாகரத்தினுள் மூழ்குபவர்களாகவும், இல்லற மென்னுந் துறையிலேறி நெருக்குண்டு மீண்டும் பிரபஞ்ச சாகரத்தினுள் வீழ்ந்து முழுகுவதும், மீண்டும் இல்லற மெனுந்துறையிலேறுவதுமாக மக்கள் படுமிடர்களைக் கண்ட சுவாமிஜி உலகமக்களுக்குத் துறவறமெனுந் துறையைக் காட்டி அதிலேறியிடருறாவண்ணம் காப்பதன் காரணமாக, ஞானோபதேசஞ் செய்துயிர்களைக் காப்பது காரணமாக ''ஆலவாய் ஆச்சிரமம்'' எனும் பர்ணசாலையமைத்துச் சோம சுந்தரருடனும், மீனாட்சியம்மையுடனும் கூடி வாழ்ந்து வந்தார்.

சுவாமிஜியின் ஞானோபதேசம் முற்பிறவிகளில் நற்றவஞ் செய்தவர்கள் தம்மாலியன்றவரையனுஷ்டித்தவர்களும், (இல்லறத்திலிருந்தாலும்) இல்லறத்தை நாடாமல் துறவறம்

மேற்கொண்டவர்களுமுண்டு. இல்லறம் என்றால் இல்லற தர்மம்தனை குறள்மூலம் எடுத்துரைத்த திருவள்ளுவரும் வாசுகியும் போல் வாழ்வதுதான் இல்லறம். குறள்கூறும் வழி யில் இல்லறம் நடாத்துபவர் இன்றுயாருளர்? எளிமையும், பக்திநெறியும், இல்லறத்தானுக்கு வேண்டிய நற்குணங்களுடன் நல்லற வழியில் நடாத்துபவர் யாருமுண்டோ? இல்லை யென்பது யாவருமறிந்த உண்மை.

குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் சுவாமிஜியிடம் வந்து தமது வறுமையைக் கூறியிரங்குவர். அடியுதை வாங்கு பவர்களும் இவர்களிலடங்குவர். இவற்றைக் கேட்ட சுவாமிஜி கூறும் வசனங்கள். ''குரங்கின் கைப்பூமாலை'', ''சற்றேறுமாறாய் நடப்பானேயாகில் கூறாமல் சந்நியாசம் கொள்''. அந்தக் காலத்துப் பெண்கள் தமது குடும்பமேயுலகம் என்றிருந்தவர்கள். தமது குடும்பத்தினையும், உறவினரையும் பேணி நடந்தவர்கள்.

நாகரீக மாயையில் சிக்கிவிடாமல் எளிய வாழ்க்கை, பக்திநெறி, சமயஅனுஷ்டானங்களைக் கைவிடாதிருந்தமை குறிப்பிடத்தக்கதாம். மனத்தூய்மை இவர்களுக்கியற்கையழகு. எனவே, சுவாமிஜி இவர்களின் குறைகளைக் கேட்டு கணவன் மார்களையழைத்துப் புத்தி சொல்லியனுப்புவது வழக்கம். இவர்களில் ஒற்றுமையாய் வாழ்ந்தவர்களுமுண்டு. திருந்த மாட்டாதவர்களுமுண்டு. பௌர்ணமி நாட்களில் பொதுவாகக் குடும்பங்களாகவே சென்று வழிபடுவது காரைதீப மக்களின் வழக்கம்.

சிவம்

# 4

காரைதீபத்தில் சுவாமிஜி தன் மோனதப காலம் முடிய ஆண்சீடர்களையமர்த்திக் கொண்டார். காரை தீபமக்கள் கல்வியில் முன்னேற்றமடையாத காலமது. கிறிஸ்தவ பாட சாலைகள் முளைப்பது சைவத்திற்கும், தமிழிற்கும் இடையூறே யென்பதையுணர்ந்து, சைவத்தமிழ் பாடசாலையாகக் காரைநகர் இந்துக் கல்லூரியாக மாற்றியமைத்தார்.

இது நிற்க, சுவாமிஜியிடம் ஆங்கிலம், கணிதம் என்னுமிரு பாடங்களும் கற்க வெளிவாரியாகவும் பலர் சேர்ந்தனர். பாடசாலைக்கு (கிறிஸ்தவ) செல்ல விரும்பாமல் மாடு மேய்த்துக்கொண்டு சென்ற சிறுவர்களைக் கூப்பிட்டுப் பாடம் கற்பித்தார். ஆங்கில உச்சரிப்பே வராமல் கஷ்டப்பட்டார் களென்றும், கணிதபாடம் விளக்கம் மிகவும் குறைவாகவே யிருந்ததென்றும் சுவாமிஜி கூறியிருக்கிறார்.

அதைவிட 'Algebra' என்னும் சொல்லையொரு மாணவன் ''அஞ்சுபுறா'' என்று கூறுவான் என்றும், அவர்களுக்கு அடித்துப்படிப்பித்த இந்தக் கை இன்னும் ''நேர்'' மாற வில்லையென்றும் கூறுவார். ஆங்கில மொழி மூலக் கல்வியே நடைமுறையிலிருந்து வந்தது என்பது யாவருமறிந்ததே. எனவேதான் தமிழ்ப் பாடசாலைகளின் அவசியம் இன்றி யமையாததாயிற்று.

இதைவிடக் களபூமியில் ''சுந்தரமூர்த்தி வித்தியாலயம்'' என்ற பாடசாலையையும் சுவாமிஜி தொடங்கி வைத்தார். இன்றும் சுவாமிஜியின் பெயரால் சுவாமிஜி சமாதியடைந்த வைகாசிப் பரணியில் சுவாமிஜியின் ஆன்மீகச் சீடரான அம்பிகைபாகன் என்பவரால் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் சயம்பர் என்னும் கிறிஸ்தவரால் ஒரு பாட சாலை ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் கல்விகற்று வந்தனர்.

இப்பாடசாலையை சுவாமிஜி நாவலர் வழியைப் பின்பற்றி காரைநகர் இந்துக் கல்லூரியெனப் பெயரிட்டு மாணவர் சைவ ஒழுக்கமுடன் வாழ வழி வகுத்தார். காரை நகர் ஆதி காலத்திலிருந்து சுவாமிஜியின் முன்னோர்களால் ஆளப்பட்டு வந்தது. மாயையின் சொரூபமான நாகரீகத்தால் தாக்கப்படாமல் காரைதீபம் ஆதியிலிருந்தே விளங்கி வந்தது. அங்குள்ள மக்கள் சைவ நெறியுடன் பின்னிப் பிணைந்து எளிய வாழ்க்கையை நடாத்தி வந்தனர்.

''சிறுகக்கட்டி பெருகவாழ்தல்'' சிறந்ததென்று அறிந்து வாழ்ந்தவர்கள், மாயையும் ஞானமும் ஒன்றுக்கொன்று எதிரானவை. எனவேதான் ஞானப்பெருவாழ்வான சுவாமிஜியும் அகத்தியர் வாழ்ந்த காரைதீபத்தைத் தமக்கேற்ற ஞானபூமியாக அமைத்துக் கொண்டதில் ஒன்றும் வியப்பில்லை. மறைஞான சம்பந்தர் பாடசாலை, மெய்கண்டான் பாடசாலை என்றிரு பாடசாலைகளையும் சுவாமிஜி ஆரம்பித்து வைத்தவர். எனினும் சுந்தரமூர்த்தி வித்தியாலயக் குறிப்பேடுகளில் சுவாமிஜியைப் பற்றிய குறிப்புகளின்றும் உண்டு. மற்றைய பாடசாலைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆச்சிரமத்திற்குத் தொண்டு செய்யும் சிறுவர்களுக்கும், ஆச்சிரமத்தில் வந்து படிக்கும் சிறுவர்களுக்கும் திருக்குறள் சொல்லிக்கொடுத்து மனனஞ்செய்யச் சொல்வது சுவாமிஜியின் வழக்கம். ஒரு குறள் பாடமாக்கினால் பணந்தரப்படும் என்று கூறியே அச்சிறுவர்களை மனனஞ் செய்யப்பண்ணி, பின்னவர்கள் பாடமாக்கிய குறளின் எண்ணிக்கைப்படி அவர்களுக்குப் பணம் வழங்கியவர் சுவாமிஜி, ஒவ்வொரு வரினதும் ஆன்மீகக் கல்வியையும், வாழ்வியல் ஆதாரமான ஆங்கிலக் கல்வியையும் புகட்டியதுடனில்லாமல், அந்த உண்மையை உணர்த்தியவர்கள் தம் வாழ்வில் அருட்செல்வம் பொருட் செல்வம் பெற்றுவாழ அருளிய பெருமையைக் காரை தீபமக்கள் என்றும் மறக்கமுடியாத, மறுக்கமுடியாத பேருண்மையாகும்.

சிவம்

# 5

நாயன்மாகளுள் திருஞானசம்பந்தா் திருநீற்றின் பெருமையை நிலைநாட்டியவர் ஆவார். மூவரும் அற்புதங்கள் நிகழ்த்தி யுள்ளனராயினும், சுந்தரரும், அப்பரும் தமிழ் மறை பாடியே அற்புதங்கள் செய்தனர். திருஞானசம்பந்தர் தமிழ்மறையுடன் திருநீற்றின் பெருமையையும் நெடுமாற பாண்டியனின் வெப்பு நோய் நீக்கத்தில் காட்டியுள்ளார். திருஞானசம்பந்தர் தன் திருக்கரத்தால் பாண்டியனின் மேனியைத் தீண்டி விபூதி யிட்டவுடன் வெப்புநோயோடு பாண்டியனின் கூனும் நிமிர்ந்து, பாண்டியன் உயிர்க்கு முத்தியும் சிட்டியதென்பது புராணம், இந்தத் திருத்தொண்டர் புராணம் சேக்கிழாரால் பாடப்பட்டது.

சேக்கிழாருக்கோவெனில் சிதம்பர நடராஜரால் ‘‘உலகெலாம்’’ என்று அடியெடுத்துக் கொடுக்கப்பட்டது. இதற்கு முன்பு நாரையூரப் பொல்லாப் பிள்ளையாரால் நம்பியாண்டார் நம்பிக்கு நாயன்மார்களின் வரலாறு அறிவிக்கப்பட்ட உண்மையாம். இது நிற்க, சைவசமயம் வளர்த்த நாயன்மாருள். ஞானசம்பந்தர் வழியிலே சுவாமிஜி திருநீற்றின் பெருமையை வளர்த்த வராவார். சைவசமயப் பண்பாட்டின்படி வேட்டி கட்டினாலன்றி விபூதி கொடுப்பதுமில்லை.

சுவாமிஜியிடம் வந்து நோய்நீங்கியோர் ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கானோர். சுவாமிஜி தன்வாயால் சொன்னவர்கள் குறிப்பாக ஒரு சிலரே. அடியேன் சுவாமிஜி யின் ஆச்சிரமத்தில் இருந்த ஐந்து வருடங்களில் நேரில் கண்டவை ஏராளம். ஏன் எமது குடும்பத்திலேகூட சுமார் ஏழு பேர் சுவாமியின் திருநீற்றினால் வியாதி நீங்கப்பெற்றவர்களே. ஏறக்குறைய காரைதீபத்தில் வாழ்ந்த குடும்பங்களை ஆராயின் அவர்களுள் நோய் நீங்கப்பெற்றவர் அதிகம். இவர்களை விட வெளியூரிலிருந்து வந்தவர்களும் ஏராளமே.

திருநீற்றினால் மட்டும்தான் நோய்நீக்கமல்ல. சுவாமிஜியின் முறைப்படி முதலில் சமுத்திர தீர்த்தம் ஆடுதல், தீருநீறு போடுதல், வேப்பங்குழையினால் பார்வை பார்த்தல், பிரசாதங் கொடுத்துச் சாப்பிடச் செய்தல், என்றின்னோரன்ன பல முறைகள் இயற்றியவரவர் நோய்வீச்சின் தன்மையை அறிந்து செயற் படுவார். சில நோயாளிகட்குப் பத்து நாள் தீர்த்தமாடச் செய்து திருநீறு போட்டு சுவாமி பிரசாதம் சாம்பார் குடிக்கக் கொடுப்பதும் வழக்கம். இதெல்லாம் அடியேன் சுவாமிஜி சொல்லக்கேட்டவையாம்.

Dr. J.C. குமரப்பா பிளட் பிரஷரால் நலிவுற்றபோது காரைதீபம் வந்து சுவாமிஜியின் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து மேற்சொன்ன முறைப்படி குணமானார் என்று சுவாமிஜி சொல்லக் கேட்டிருக்கிறேன். அக்காலத்தில் இந்தியாவில் டாக்டர்களால் மாற்றமுடியவில்லை என்றும் தான் நல்ல சுகமாக இருப்பதாகவும் Dr. J.C. குமரப்பா அவர்கள் சுவாமிக்கு பின்பு கூறியதையும் சுவாமிஜி கூறியிருக்கிறார். இது ஒரு உதாரணம் மட்டுமே. சுவாமிஜி கசம், ஈளை, இருமல், குக்கல், விஷமுறிவு, இருதய நோய்கள், குன்மம், வாதம், பலவிதமான காய்ச்சல், பிடிப்பு, கால், நாரியுளைவு என்பன வற்றுடன் தீர்த்தமாடும்பொழுது எமது மலங்களையும் கழுவி வைப்பது வழக்கம்.

சிறு குழந்தைகட்கு வரும் பேதி நோயையும், திருநீற்றினால் நிவாரணங் கொடுத்துள்ளார். இவையெல்லாம் நேரில் கண்டவையும், கேட்ட செய்திகளுமாம். ஆச்சிரமத்திற்கு வரமுடியாத நோயாளிகட்கு உறவினர்கள் வந்து உற்றது கூறி விபூதி கொண்டுசென்று வீடடிலுள்ள நோயாளிகட்குப் பூசியும் நோய் நிவாரணம் பெறுவதும் உண்டு. “தெய்வீக வைத்தியாலயம்’’ என்றழைக்கப்படும் சுவாமிஜியின் ஆச்சிரமத்தில் பெண்கள் அதிலும் பிள்ளைகளில்லாத தாய்மார்கள் பிள்ளைகள் வேண்டி (அதிலும் ஆண்பிள்ளைகளில்லாதவர்கள் ஆண்பிள்ளைகள் வேண்டியும்) விரதம் நோற்றதும் உண்டு.

பிள்ளைகளில்லாத தாய்மார்கள் தீர்த்தமாடி சுவாமிஜியின் திருக்கரத்தினால் திருநீறு வாங்கிக் கொள்வதுதான் ஆச்சிரமத்து மரபும், மகிமையுமாம். சில பெற்றோர் சுவாமிஜியைக் கொண்டே பெயரிட்டுக் கொள்வதும் வழக்கம். நாயன்மார்களின் பெயர்கள், அம்பாளின் பெயர்கள், சிவபெருமானின் பெயர்கள்தான் சூட்டப் படும். ''சாம்பார்'' பிரசாதம், ''குழம்பு'' பிரசாதம் நோயாளிகட்குக் கொடுக்கப்படுவதுமுண்டு.

பெண்களின் பிரத்தியேக நோய்கட்கு ''குழம்பும்'', ''உழுத்தங்களியும்'' கொடுக்கப்படும். இத்தகைய மேன்மையான ''தெய்வீக வைத்தியாலயம்'' சைவசமய வரலாற்றில் இதற்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லையென்பது தெளிவு. முன்பு அம்பாள் வைத்தியம் செய்வதற்காகத் தைலமும், வேப்பங் குழையுங் கொண்டு சென்றதாகப் புராணங்கூறும். நேரடியாகத் திருநீறும் வேப்பங்குழையும் கொண்டு வைத்தியம் செய்யும் வித்தையைச் சுவாமிஜியிடந்தானறிந்தேன்.

சில முதியவர்கள் தலையிடி, நித்திரையின்மை என்னும் வியாதிகட்குப் பரிகாரம் தேடச் சுவாமிஜியை நாடிவந்தபொழுது கண்டிருந்தேன்.

*''காலம் மூன்றும் கருத்தில் உணர்ந்தாலும்*
*ஞாலம் தனக்கு ரையார்நல்லோர் பராபரமே''*

என்று தாயுமானவர் சிவஞானிகள் பற்றிக்கூறுவதை யாமுணர வேண்டும். சுவாமிஜி தன்னிடம் வருபவர்களின் முகத்தைப் பார்த்து அவர்களின் நோய்நாடி, நோய்முதல் நாடியந்த வினையை நீற்றால், தீர்த்தத்தால் கழுவித்துடைத்து வைப்பர். இந்தத் தெய்வீக வைத்தியமுறையுலகில் எங்கும், எவரும் கண்டதில்லை, கேட்டல்லை, அறிந்ததுமில்லை. சிவபூமியாகும் இலங்கையின் சிரசாகிய யாழ்ப்பாணம், அதிலும் காரைதீபம் செய்த பெருந்தவத்தினால் சுவாமிஜி, அங்கு வாழ்ந்திருந்தார்.

எனினும் யாழ்ப்பாண மண்ணிலேயும் அவர் நடந்தது முண்டு. இந்த யாழ்ப்பாணத்தின் பெருமை என்னையோ யெனில், இன்றும் கணபதியும், முருகனும் ஐயப்பனாரும் உலா வந்து கொண்டிருக்கின்றனர். இந்த ஞானச் செய்தியானது உலகர்க்கெட்டாததாம். வேப்பங்குழையும், நீரும், தீர்த்தமுங் கொண்டு சுவாமிஜி நோக்கக் குழையும் வினைமலம். இதனாலன்றோ மக்கள் நோயிடர்தீர்ந்து சுத்தராயினர். இந்த ஞானச்செய்தியும் அவர்க்கெட்டாததாம்.

சைவாகம முறைப்படித் தயாரிக்கப்பட்ட திருநீற்றைத்தவிர வேறு விபூதி பாவிப்பதில்லை. சைவாகம முறையைப் பின்பற்றும் சைவசித்தாந்த ஞானகுருவாம் சுவாமிஜியின் தெய்வீக வைத்திய சேவையைப் பெற்ற யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்கள் செய்ததவம் யார் செய்தாரிவ்வுலகில் என்பதைப் பெருமையுடன் அடியேன் சாற்றியுள்ளேன்.

சிவம்

# 6

நாயன்மார்கள்போல் சிவத்துடன் பேசும் சிவஞானியாம் சுவாமிஜி 1940-ம் ஆண்டு வெளிச்ச வீட்டடியில் பர்ண சாலையமைத்து நிலையாகத் தங்கினார். 1976ம் ஆண்டு வைகாசி மாதப் பரணியில் சமாதிநிலை கூடினார் சுவாமிஜி. தனது தவவாழ்வில் முற்பகுதியில் வெளிச்சவீட்டு பங்களா வில் அன்னதானம், பூசை முதலியன நடைமுறைப்படுத்தி வந்தார். மாதாமாதம் பௌர்ணமியில் யந்திரபூசை விசேட பூசையாக காரைதீப மக்கள் சுவாமியுடன் சேர்ந்து நடத்தி வந்தனரென்று அறிந்தோம். பௌர்ணமி கூடும் நேரத்தில் சமுத்திர தீர்த்தமாடிவிட்டு வந்து யந்திரபூசை நடாத்தி வடை, பாயாசன்ன நைவேத்தியம் வைப்பது வழக்கம். மக்கள் வண்டி வண்டியாக வந்து இத்திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கமாம்.

பூசை, சாப்பாடு (நைவேத்தியம்), முடிந்துவீடு செல்லச் சாமம் (10 மணிக்கு மேல்) செல்லும்; குழந்தைகள் நைவேத்தியம் கிட்டுமுன்பே நித்திரைக்குச்சென்று விடுவார் களாம். எல்லாம் முடிந்தபின்னர் வண்டில்கள் ஒன்றன்பின் ஒன்றாக மாட்டின் சலங்கையொலியோசையுடன் இருளைக் கிழித்துக்கொண்டு செல்லும் முன்பு நடந்துவந்தவர்கள் வீடு திரும்பும்பொழுது வண்டில் வரிசைகளிலேறிச் சவாரி செய்து வீடு திரும்புவர்.

இதைவிடக் குருபூசை, சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பா, தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற திருநாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இத்திரு நாட்களில் தீர்த்தக் கரையோ ஏகப்பட்ட அமர்க்களமாயிருக்கும். சுவாமிஜியின் ஆணைப்படி கணவன் மனைவியாகவும், மகனின் கையைப் பிடித்துத் தாய்மார்களும், கணவன், மகனில்லாதவர்கள் பசுவின் வாலைப்பிடித்துக் கொண்டும் தீர்த்தமாடுவது வழக்கம்.

குழந்தையுடன் வருந்தாய்மார்கள் எல்லாரும் குழந்தையைச் சுவாமிஜியின் திருக்கரத்தில் கொடுத்துவிடுவர். சுவாமிஜியே சமுத்திர தீர்த்தத்தில் குழந்தையைத் தீர்த்தமாடப்பண்ணித் தாயின் கையில் கொடுப்பார். தாய்மார் வரிசையாக நின்று குழந்தையைக் கொடுத்து வாங்கித் துவட்டி ஈரம்போக்குவர். தீர்த்தவிசேட தினத்தில் பசுக்கன்றும் தீர்த்தக் கரையில் ஒருவர் மாறியொருவர் பிடித்துக்கொண்டு நிற்பர், ஏனையோர் பசுவாலைப் பிடித்துத் தீர்த்தமாடுவர்.

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த அந்தச் சமுத்திர தீர்த்தத்திலே தங்கள் மலங்கழுவுவார் பொருட்டுத் தீர்த்தமாடியுய்ந்தனர் எம் சைவ மாந்தர்கள். வியாதியஸ்தர்கள், விரதமிருப்பவர்கள், ஆன்மீக நோக்கங் கொண்டோரென பலவகைப்பட்டோரும் இதிலடங்குவர். ஆன்மீக நெறியில் சம்பந்தப்பட்டவர்கள் திருவிளையாடற் புராணத்தில் வரும் சமுத்திர தீர்த்தத்தின் பெருமையையுணர்ந்து இங்குச் சுவாமிஜி யினால் ஞானயோக முறையினால் எழுகடல் தீர்த்தம் வருவித்துச் சங்கல்பம்பண்ணிக் கொடுக்கப் பத்திர புலுபங்களையச் சமுத்திரராஜனுக்கர்ப்பணித்து வணங்கித் தீர்த்தமாட, ஏனையோருமதைப் பின்பற்றித் தீர்த்தமாடுவர்.

ஆன்மீகநெறி வழிப்பட்டோர் மாதப்பிறப்பு, வருடப் பிறப்பு, சாந்திர வருடப் பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி சித்திரையட்டமி, குருபூசை (நால்வர்) நடேசர பிஷேகம், சந்திர சூரிய கிரகண காலங்கள், கந்தசஷ்டி, நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை சோமவாரம், திருவெம்பா, சிதம்பரத் திருவிழா, நயினாதீவுத் திருவிழா, கதிர்காமத் திருவிழா, முன்னேஸ்வரத் திருவிழா என்னும் இன்னோரன்ன திருநாட்களில் தீர்த்தக்கரைக்குச் சுவாமிஜி யுடன் சென்று தீர்த்தமாடுவது வழக்கம்.

இங்ஙனம் சுவாமிஜியின் தீர்த்தக்கரையானது வியாதியஸ்தர் களின் வியாதி கழுவும் தீர்த்தமாகவும், விரதியர்கட்குத்

தீர்த்த விசேடமாகவும், ஆன்மீகர்கட்கு மும்மலங்கள் கழுவும் தீர்த்த விசேடமாகவும் திகழ்ந்தது. சுவாமிஜியின் மடப் பர்ணசாலை யில் ஆலவாய் சோமசுந்தரப்பெருமானும் அங்கயற்கண்ணி யம்மையும் வந்தமர்ந்திருந்ததை முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

அம்மையும் அப்பனும் இந்தச் சமுத்திர தீர்த்தத்தை அருட்புனலாய் மாற்றியங்கும் சாந்நித்தியமானது ஞானச் செய்தியாம். இன்று அப்பன் கைலைக்குச் சென்றுவிட, அம்மை தான்மத்திரம் ஒரு வினயம்பற்றி அங்கு (தீர்த்தக்கரை, சுவாமிஜியின் மடக்கோயிலிலிருந்து சுவாமிஜியின் சமாதிக் கோயில் வரை) உலாவருவதாகக் கூறியிருக்கின்றார். இன்றுங் கூட இந்தத் தீர்த்தக்கரையில் சுவாமிஜியுடன் தீர்த்தமாடியவர் களின் சந்ததியினர் தீர்த்தமாடி வருகின்றனர் என்பதை அறிந்து வருகிறேன்.

சிலர் சுவாமிஜியின் மடக்கோயில் இருந்த இடத்தைப் பார்வையிட்டும் வருகின்றனர். சுவாமிஜி முன்பு கூறியவை சிலவற்றை இங்கு கூறுகிறேன். ''கன்னியாகுமரியிலிருக்கும் சமுத்திரதீர்த்தம் விசேடம் என்றும் அதற்கொப்பது இந்தத் தீர்த்தம்.'' என்றும் ''முழுநம்பிக்கையுடன் தீர்த்தமாடின் உடன் பலன்'' என்றும், எல்லாத் தீர்த்தங்களையும் ஒருங்கேயாடு வதாகச் சங்கல்பம் பண்ணியாட வேண்டும்'' என்றும் கூறி யுள்ளார்.

அம்மையும் அப்பனும் சாந்நித்தியமாயிருக்கும் தீர்த்தக் கரையில் வேண்டுவார் வேண்டுவதைப் பெறும்வண்ணம் பிரேரகசகதியாய், ஞானகுருவாய் சுவாமிஜி முன்னிற்ப நம் சைவ மக்கள் (முன்னோர், இன்றும் பலர் இருக்கிறார்கள்) பெற்றபேறு இனியார் பெறுவாரிவ்வுலகில்?

சிவம்

# 7

சுவாமிஜியின் மடக்கோயில் அப்பால் தீர்த்தக்கரையதற்கும் அப்பால் காரைதீபத்தில் வாழும் கடற்றொழில் செய்பவர்களான முக்கியர் என்போர் தொழிற்றுறையமைத்திருந்தனர். இவர்கள் மாலையில் கரையிலிருந்து தொழிலுக்காக நடுக்கடலை நோக்கி நகர்வது வழக்கம். சுவாமிஜி சாயங்காலப் பூஜை நேரம் சங்கூதும்பொழுது கடற்றொழிலாளரும் படகிலேறிக் கோயிலுக்கு நேரே வருவார்கள். (கடலுக்குள்) நூற்றுக்கணக்கான படகுகள் (பாயுடன்) கட்டுமரங்கள் செல்வதேயோரழகுதான். படகிலுள்ள அத்தனை தொழிலாளரும் சுவாமிஜியின் மடக்கோயில் சங்கின் பிரணவ ஒலிகேட்டதும் ''அரோகரா'' ''அரோகரா'' என்றோலமிட்டு அம்பாளை வணங்கித் தம் தொழிலுக்கிடையூறும், உயிர்க்காபத்தும் வாராமல் காக்கும்படி அருள்கேட்டுக் கடலுக்குச் செல்வது வழக்கம்.

இந்தத் தெய்வீக ஆன்மிக சங்கமத்தைப் பிரேரகசக்தியாய் நின்றருள் கூட்டுவது சுவாமிஜியின் வழக்கமும் ஆயிற்று. இக்காட்சியை நேரில் பாரத்தவர்க்கே இதன் சூட்சுமம் விளங்கும். அப்பொழுது படகிலும் பார்க்கக் கட்டுமரங்களேயதிகம். இன்னொரு சுகந்தமான செய்தி, சுவாமிஜி அந்தக் காலத்தில் ஆண்டியார் கூட்டமொடு நயினாதீவிற்குச் செல்வது வழக்கம். இந்தக் கோவளத்துறையிலிருந்துதான் புறப்படுவது வழக்கம். கட்டுமரங்களிலேறியே நயினாதீவிற்குச் செல்வார்கள்.

நயினாதீவில் யந்திர பூசையைப் பௌர்ணமி காலத்தில் தொடக்கி வைத்தவர் சுவாமிஜியே. யந்திரபூசையைக் காண்பதற்காக வேறுசில மக்களும் போயிருக்கிறார்கள். அம்பாளைப் பூசிக்கும் நாகபாம்பைக் கூட தன்னுடன் வரும் மக்களுக்குக் காட்டியிருக்கிறார். இது நிற்க, முக்குவர் என்றும், முக்கியர் என்றுமழைக்கப்படும் கடற்றொழிலாளர்கள் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் வேலியடைப்பு, குடிசைகள் போடுதல் போன்ற தொழில்களும் செய்தவர்கள்.

இவர்களில் அதிகம்பேர் சுவாமிஜியின் ஆச்சிரமத்துச் சாப்பாடு சாப்பிட்டு வளர்ந்தவர்கள். அந்தக் காலத்தில் சுவாமிஜி கோவளத் துறையை விட்டுக் கொல்லன் கலட்டிக்கு வந்து விட்டார். (1970ல்) இந்தத் துறைக்கும் தொழில்செய்யக் கடற்றொழிலாளர் வந்திருந்தனர். இவர்கள் சுவாமிஜியைக் கண்டால் வணங்கிவிட்டே செல்வார்கள், தீர்த்தமாடப் போகும் வழியில் சந்தித்தாலும் சுவாமிஜியை வணங்கிவிட்டே செல்வர்.

சில முதியவர்கள் ''ஐயா'' என்றும் ''அரோகரா'' என்றுஞ் சொல்வார்கள். வெள்ளப்பெருக்கு, புயல் காலத்தில் இவர் கட்குச் சாப்பாடு கொடுத்தவர் சுவாமிஜி. இவர்களைவிடப் பஞ்சகாலத்தில் அம்பலவன் எனப்படும் (பள்ளர்) கிழவன் இப்போது சமாதியிருக்கும் வளவிற்கருகில் இருந்தவன். இவனுடைய மகள் அன்னம்மா, குஞ்சு இவர்களுடைய குடும்பத்திற்கும் காலையுணவாகப் பாற்கஞ்சி கொடுத்து வந்தவர். சில வேளைகளில் (பஞ்சமில்லாத) அம்பலவன் சுவாமிஜியைக் கண்டால் (வீட்டில் ஒன்றுமில்லாவிடில்) ஒன்றும் சாப்பிடவில்லை. பசிக்கிறது என்று கூறினால் குளிக்கப்போகும் வழியில் நின்றுகொண்டு (இடியப்பம் உடனேயவித்து) ஆச்சிரமத்தில் இருக்கும் சாப்பாடு எடுப்பித்துக் கொடுத்துவிட்டே அப்பால் நகர்வது வழக்கம்.

சுவாமிஜி வர்ணாச்சிரம தர்மத்தை மதித்து அவரவர்க் கேற்றபடி மதித்து அன்னம் கொடுக்கும் தாதாவாக விளங்கி யமை அவரிடம் சாப்பிட்டவர்க்கே புரியும். ஞானாநந்தரூபியான சுவாமிஜி தன்னிடம் வரும் எந்த வருணத்தவராயினும் முகத்தைப் பார்த்து அவர்களின் உயிரையும் மனத்தையும் அறிந்திடுவார். எனவேயதற்கேற்பவே பரிகாரம். சாப்பாடாயினும், இதந்தரும் வார்த்தைகளாயினும் கொடுத்து ஆறுதல்படுத்து வதுடன் அம்பாளுடன் கதைத்துப் பரிகாரமும், பண்ணி வைப்பார். அதேநேரம் நாமும் செய்ய வேண்டியதைச் செய்யச் சொல்லுவார். எவர்க்கும் நோய் பசி மாத்திரமல்ல வினை தீர்க்கும் பரமஔடதம் போல் விளங்கிய சுவாமிஜி காரை தீபத்தின் வரப்பிரசாதமேயாம்.

சிவம்

# 8

காரைதீபத்தின் ஆன்மீகச் சக்கரவர்த்தியாம் சுவாமிஜி சைவசமயத்தை எந்தஅளவு நேசித்தாரோ அதேயளவிற்குப் பசுவை நேசித்தவர். சைவசமயமும் பசுவும் ஒன்றுக்கொன்று சமமானதென்றோ அன்றி ஒன்றையொன்று விட்டுப்பிரியாத தென்றும் கூறலாம். சைவசமயத்தின் தொன்மையையும் பெருமையையும் பறைசாற்றுவன திருக்கோயில்களே. இத் திருக்கோயினுள்ளிருக்கும் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டும்பொருட்டு பசுவும், நெல்லும் சிவபெருமானால் பூமிக்கனுப்பப் பட்டவையாம். சைவசமயச் சின்னங்களுள் ஒன்றான திருநீற்றைத் தயாரிக்க சாணம் உதவுகின்றது.

சிவாகம விதிப்படி தயாரிக்கப்பட்டதே திருநீறு. இத்துடன் எல்லாத் தெய்வங்களும், சிறுதெய்வங்கள், தேவர்கள், தீர்த்தங்கள் யாவும் பசுவுடம்பில் அமர்ந்திருக்கிறார்கள். இப்படியான பசுவைப் போற்றினார். மனிதர்களிலும் பார்க்க பசுக்களை சுவாமிஜி நேசித்தமை சுவாமியுடனிருந்தவர்கட்கே விளங்கும். சுவாமிஜியின் மடப்பர்ணசாலையில் இறைபூசையும், கோ பூசையும் விசேட அம்சமாகும்.

வெளிச்சவீட்டுப் பங்களாவில் அன்னதானம் நடக்கும் காலத்தில் இறைபூசை, கோபூசை நடந்தேறியதும், எல்லாரும் உணவருந்துமுன்பு, இலையில் இருந்து ஒருபிடியன்னம் பசுவிற்கு வழங்கிவிட்டே உணவருந்துவது என்பது சுவாமிஜி யின் கட்டளை. அதன்படி பசுவொன்று முன்பாகக் கட்டிவைத்து, அதன் முன்பு ஒரு பெரிய சட்டிவைத்து விட்டிருக்கும். இலை யில் உணவு பரிமாறியவுடன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிடி அன்னம் சாம்பார் உருண்டை சட்டியிலிட்டபின்னர் உணவுண்பது வழக்கமென்றறிந்தோம். இந்த வெளிச்சவீட்டு பங்களாவைவிட்டு மால்கள் போட்டுமிருந்தவர் சுவாமிஜி என்றும் கேள்விப்பட்டோம்.

1944ம் ஆண்டிலொரு மால் போட்டிருந்தாரென்றும், 1949ம் ஆண்டு சுவாமிஜியின் மாலுக்குத் தீ வைத்தது சீவரத்தினம் என்றும் கூறினார் சுவாமிஜி. 1955ம் மால்போட்டதென்றும் சித்திராபூரணை சுவாமிஜி கூறியிருந்தார். எந்தெந்த இடங்களில் இருந்தாலும் கோபூசையும் ஒழுங்காகவே நடந்துவந்தது. பட்டிப் பொங்கற்றிருநாளில் எல்லாப் பசுக்களுக்கும் அர்ச்சனை, தூப, தீப ஆராதனை நடக்கும். மாட்டுக்கொட்டகையில் பொங்கல் பொங்கிப் பசுவிற்கு நைவேத்தியம்பண்ணுவதும், அன்று கோபாலன் சுவாமிஜியால் அழைக்கப்பட்டு அன்று பொங்கலும் பூசையும் கோபாலுனுக்கே சங்கல்பம் பண்ணப்படும்.

சுவாமிஜி கடற்கரையாலே நடந்து ஆடியமாவாசைத் தீர்த்தமாடி அன்பர்களுடன் கீரிமலைக்குச் செல்வதும் உண்டாம். ஒருமுறை பொன்னாலைக் கடற்கரை வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபொழுது பசுக்கூட்டத்துள் நின்றவொரு பசு ஓடிவந்து முன்னிரண்டு கால்களையும் மடித்துச் சுவாமிஜி யின் முன் மண்டியிட்டு வணங்கியதாம். இதைக் கண்டவர் பொன்னாலைப் பிள்ளையார் கோயில் அர்ச்சகர் தியாகராஜா. இவர் நீண்ட கால சுவாமிஜியின் அன்பர். இவரும் இவரது குடும்பமும் சுவாமிஜியின் சீடப்பிள்ளைகள். (தாய் தந்தை, பிள்ளைகள் எல்லோரும்) நான்கு சந்ததியினர் ஆவர்.

சுவாமிஜியின் ஆச்சிரமத்துப் பசுக்களுக்கு நாயன்மார்களின் பெயர்கள் அம்பாளின் பெயர்கள் சூட்டப்படும். (உ+ம் மீனாட்சி, சிவகாமி, காமாட்சி, புனிதம், திலகம், மனோன்மணி, பவானி, உமா, பார்வதி, பகவதி போன்றன).

இவையாவும் பௌர்ணமியன்றுதான் பிறந்தவையென்பது குறிப்பிடத்தக்க அம்சமாம். இங்கு அதிகம் பசுக்கன்றுகளே பிறக்குமாம். காளைக் கன்றுகளுக்குச் சுந்தரன், மாணிக்கன், வாகீசன், சம்பந்தன், நந்தன் என்ற பெயர்கள் வைக்கப்பட்டது. பிறந்தவுடன் சுவாமிஜி கன்றைப் பார்த்துப் பெயர் சூட்டுவதுதான்

வழக்கம். சுவாமிஜியின் ஆச்சிரமத்துப் பசுக்கள் வெளியில் மேயக் கொண்டு செல்லும்போது பசுக்களின் வரிசை பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். கம்பீரமுடன் இராஜநடை யுடன் தமது தலைவியின்பின் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்வதுதான் பசுக்களின் இயல்பு.

தமக்குள் ஒருதலைவியைத் தாமே தெரிந்து அந்தப் பசுவின் பின்னாலேதான் செல்வதனைத் தமது நியதியாய்க் கொள்வதும் கண்கொள்ளாக் காட்சிதான், நாம் காணும்பொழுது புனிதவதியே தலைவி அது இறந்ததும் அடுத்த திலகவதி தலைவியாகச் சென்றது. இதற்கிடையில் புதிதாகப் பிறந்த கன்றுகள் அல்லது தெரியாமல் சிறியகன்று ஏதேனும் இடை யில் புகுந்துவிட்டால் (தலைவிக்குப் பின்னால்) அடுத்து வரும் பசு துரத்தும், அதற்கடுத்ததும் அப்படியே நடக்கும். ஒரு பசுவும் தனதிடத்தை விட்டுக்கொடுப்பதில்லை.

எனவேயந்தக் கன்றுகள் முறையாகப் பசுநிறையில் பின்னுக்குவந்திணைவதே நியதியாய்விடும். பசுநிரை வெளிக் கிளம்பும்பொழுது மானுடரைச் சட்டை செய்யாமல் (இராணுவம் போல்) போய்க்கொண்டிருக்கும் நாம் தயங்கிநின்று அவை களுக்கு வழிவிட வேண்டியதுதான். சுவாமிஜி பூமிக்குவந்து ஆச்சிரமந் தொடங்கியவுடன் கோலோகத்திலிருந்து பசுக்களும் வந்தன. இவையே ஆச்சிரமத்திற்குவந்து அபிஷேகத்திற்குப் பால்கொடுத்தன. ஆச்சிரமத்துப் பசுக்களை மற்ற ஒருவரிடமும் கொடுக்கக் கூடாது என்பது சுவாமிஜியின் கட்டளை. சிவகாமி எனும் சிரேட்டபசு இறந்தவுடன் சுவாமிஜி கண்கலங்கியதை அடியேன் கண்ணால் கண்டேன். அந்த அளவிற்குத் தெய்வ மாகவே பசுவைப் போற்றியவர் சுவாமிஜி.

பசுக்களை ஏசுவதை, அடிப்பதை ஒருகாலும் சுவாமிஜி அனுமதிப்பதில்லை. இதற்கேற்றாற்போல் மனோன்மணி என்ற பசு நம் கையில் தடியைக் கண்டால் இடிக்க ஓடிவரும். நாம்

தடியைக் கீழே போட்டால்தான் திரும்பிப் போகும். இது ஒன்றும் எனது கற்பனையில்லை. லலிதாம்பிகை அம்மன் சொற்படிதான் (நடக்கும், நடந்த விடயங்கள் அவசொற்படி காட்டியபடிதான்) எழுதுகின்றேன்.

சுவாமிஜி 1970-ம் ஆண்டுகொல்லன் கலட்டிக்கு மாறிய பொழுது இந்தப் பசுக்களுக்காகவேதான் இந்த இடத்தைத் தான் தெரிவுசெய்ததாகச் சுவாமிஜி கூறியிருக்கிறார். பசுவின் நலமே தனக்கு முக்கியமாகக் கொண்டு நடாத்தியவர் சுவாமிஜி. ஒவ்வொரு நாளும் பசுவைக் கும்பிட்டுவரின் அன்றன்று செய்யும் பாவங்கள் தீருமென்றும், பசுவின் கோசலம் கங்கா தீர்த்தத்திற்கு சமமென்றும் எமக்குக் கூறியாம் கும்பிட்டுய்ய வருளியவர் சுவாமிஜியே.

கோசலம் பிடித்து நாம் தலையில் தெளித்துட் கொண்டுய்யவும், வால்மீது பஞ்சாட்சரம் இருக்கிறதென்றும், நாம் வாலால் தலையில் தடவியெம் பாவந்தீர்க்க அருள் செய்தவர். தெரியாமல் பசுவைக் கொன்றவனுங்கூட பசுநிரை காத்து, அவைகளை யோம்பி அவைகளின் கொட்டிலில் படுத்து வந்தால், அப்பாவந்தீருமென்றும் கூறினார். தெய்வீகப் பசு பூமியிலிருக்க மானுடனுய்ய வேறொன்றுந் தேவையில்லை. ஆகவே, பசுவைப் போற்றும்படிக் கூறி எம்மை நல்வழிப் படுத்தியவர் சுவாமிஜி, சுவாமி அபிடேகத்திற்கும், நைவேத்தியத் திற்கும் பால்தரும் பசுக்களைக் கண்ட இடங்களில் மேயக் கூடாதென்று ஆசிரமத்துக்குள்ளேயே வைத்து வளர்ப்பதும், அவற்றைப் பிள்ளைகளைப்போல் பேணுவதும் சுவாமிஜி யின் வழக்கம்.

ஒரு கிழட்டுப் பசு நான் ஆச்சிரமத்திலிருந்தபொழுது தாய்மையடைந்திருந்தது. சுவாமிஜி பசுவை நோக்கி வந்தருகில் நின்று பார்த்துவிட்டுப் (எட்டுமாதம்) ‘‘பகவதி (இது பசுவின் பெயர்) கஷ்டப்படுகிறாய் போலிருக்கிறதே, கவலைப்படாதே’’

என்று ஆறுதல் கூறிவிட்டு வந்தார். கிணற்றடிக்கு போய்க் கொண்டிருந்த அடியேன் கவனமங்கே பதிந்தது. எனினும் முக்காலமும் உணர்ந்த ஞானிக்கு, பசுவின் கவலை உணர்வது பெரிய விடயமல்ல என்பதையன்று அடியேனும் உணர்ந்து கொண்டேன். அதன்பிறகு அப்பசுவைத் தாயாகும் நிலைக்கு சுவாமிஜி வைக்கவில்லை. அந்தப்பசுவின் பால்தான் சுவாமிஜி யும் சமாதியாகும்பொழுது குடித்தார். அதன்பிறகு சுவாமிஜி சமாதியாகிவிட்டார். ஆச்சிரமத்துப் பசுக்கள் ஒருகாலத்திலும் வெளியில் கொடுக்கப்படுவதில்லை.

பசுக்களை வாங்குபவர் தமக்குத் தேவை வரும்வரை வளர்த்துப் பயன்பெற்ற பின்பு விற்பார்கள். அவர்களிடம் வேண்டுபவன் என்ன செய்வான் என்பது யாவரும் அறிந்ததே. அந்தப் பழியானது அவர்கள் குலத்தையழித்துவிடும் என்பதே நியதி, சிவாகநூற்றுணிபு. இதைச் சுட்டிக் காட்டியெம்மைக் காப்பாற்றியவர் சுவாமிஜியே, நல்லதுக்கும், கெட்டதுக்கும் வித்தியாசம் காண விடாத அஞ்ஞானம் அகற்ற ஞானகுரு வினால் மட்டுமே முடியும். மற்ற வித்தியாகுருவினால் முடியாது. ஏனெனில் ஞானம் மட்டுமே மெய்யுணர்வைக் காட்டும்.

மெய்யுணர்வும், மெய்ஞானமும் சிவத்தைக் காட்டும். மற்றவையெல்லாம் அஞ்ஞானத்திற்குட்பட்டவை. ஆன்ம ஞானத்தைக் காட்டுவனவாம். நாம் இந்தக் கலியுகத்தின் பசுவையோம்பி, பூசித்துய்யலாம் எனும் இரகசியத்தை உணர்த்தி உய்வித்தவர் சுவாமிஜியே, இந்தப்பசுக்களும், காளைகளும் நந்திதேவரின் வழித்தோன்றல்கள் என்பதை உய்த்துணர்ந்து உய்யவழி காட்டிய பெருமை சுவாமிஜியையே சாரும்.

சிவம்

# 9

*‘‘நல்லாரொருவர் உளரேல் அவர்பொருட்டு*
*எல்லார்க்கும் பெய்யும் மழை’’*

என்பது திருவள்ளுவனாயனார் வாக்கு (திருக்குறள்). நல்லா ரொருவர் ஊரிலிருப்பின் அவர்க்காகப் பெய்யும் மழையை எல்லோரும் அனுபவிப்பதுதான் நியதி. வான்பெய்யும் மழை யால் உலகம் உய்வதுபோல் ஒரு சிவஞானியின் அருள் மழையாலும் உலகமுய்யும் என்று சூசகமாகக் கூறுகின்றார் சிவஞானியான திருவள்ளுவர். இவர் ஒரு இல்லறஞானி. தன் வீட்டில் கட்டுத்தறியில் ஆடை நெய்பவர். தில்லையில் காளிக்கும், நடராஜருக்கும் நடனப் போட்டி நடந்து கொண்டி ருந்தது. போட்டியில் நடராஜருக்குச் சளைக்காமல் காளியும் நடனமாடுகிறாள். இப்படியாகச் சிவமும், சக்தியும் ஒரு திருவிளையாடலை நடாத்தினர்.

சிவத்தின் சக்தி சிவனுள்ளடக்கமே. இதையுணர்த்த விரும்பிய சிவம் சிறிது நேரம் தனது சக்திக்கு விட்டுக் கொடுக்கவே மாலயனோடிந்திரர்கள் நடனப் போட்டியில் மெய்ம்மறந்தனர். திடீரென நடராஜர் தனது காதிலிருந்த குழையை விழுத்தினார். பலமான போட்டியில் குழை விழுந்ததுபோல் இருந்தது என்று நினைத்தனர் நடனப் போட்டியைத் தர்சித்தவர்கள். திடீரென நடராஜர் தன் திருவடியால் விழுந்த குழையைப் பொருத்தினார்.

சிவனார்க்குப் பலத்த கரகோசம், காளியால் சிவபெருமானைப் போல் எல்லா நடமும் ஆடிக்காட்டியும் இந்தக் குழைபூட்டும் நடமாட முடியவில்லை. எனவே, நாணமுடன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டாள். தில்லை நிருத்த சபையில் நடந்த திருவிளையாடல்களை வள்ளுவர் தனது வீட்டிலிருந்து கொண்டே தர்சித்தவர். இதைத் தர்சிக்க வைத்ததுதான்

சிவஞானம். சிவஞானியான வள்ளுவர்க்கு இந்தத் தகைமை எவ்வாறு கிட்டியது?

பதி பசு பாசமாகிய மூன்றும் என்றுமுள பொருளென்று முழங்குமெம் சைவ சித்தாந்தம். பதியாகிய சிவன் பசுக்களாகிய உயிர்கள் தமது பாசமலங்களைப் புசிப்பதன் பொருட்டு மாயையால் தனுகரண புவன போகங்களைச் சிருட்டித்து வைப்பார். மாயை மூன்று வகைப்படும். அவை சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூவகைப்படும். இவை தத்துவங்கள் என்றும் சொல்லப்படும். இந்த மூவகை மாயை களையும் கலந்து எல்லா அண்டங்களையும், அண்டங்களில் வாழும் பிண்டங்களையும் (உயிர்கள்) பதியாகிய சிவன் படைத்து, அவற்றை இயக்க ஈஸ்வரர்களையும் படைப்பார். இவர்களை எங்கள் பிரானே இயக்கிவைப்பார்.

அரசன் தன் மந்திரிமார்க்கு இன்ன வேலைகள் என்று பங்கீடு செய்து, தான் தலைமையாய் இருப்பதையொக்கும், இந்தத் தத்துவங்களைக் கடந்து தத்துவாதீதராம் கைலாய பதியைப் போல் சிவஞானிகளிருப்பர். உயிர்கள் தனு, கரணங் களைப் பொருந்திப் புவன போகங்களைப் புசிப்பிப்பதே இம்மாயைகளின் தொழில். கேவல நிலையில் கல்போல் கிடக்கும் உயிர்கள் மாயைகளின்றிச் சகல நிலைக்குட்பட மாட்டாது.

சகல நிலைக்குள் புகுந்த உயிர்களும் தம்மனம் போனபடி பாவ புண்ணியங்களைப் பெருக்குவனவாம்; பொருள், புகழ் போகங்கருதியே அலமந்துவாழும். ஆனால், சிவஞானியோ வெனில் இவற்றுளகப்படாது பதியாகிய சிவன் திருவடியை நாடி, தேடி, கூடிச் சிவஞான போதமாய் வாழ்வர். எனவே, இவர்கள் சந்நிதானத்தில் சிவன் எப்போதும் இருப்பார். இவர்கள் செயலெல்லாம் சிவன் செயலாயும், இவர்கள் நினைவு சிவன் நினைவாயுமிருக்கும்.

இவர்கள் சிவன் ஆதிக்கம் பெற்ற மெய்ஞானச் செல்வர்கள். பேயாதிக்கம் பெற்றவர்களின் செயல் பேயின் செயலாயிருப்பது போல் சிவவாதிக்கம் பெற்றவர்களின் நினைவு, சொல், செயலெலாம் சிவன் செயலாகிறது. இதனாலன்றோ நாயன்மார்கள் பலப்பல அற்புதங்களியற்றினர்.

சிவாலயங்களில் உருவவழிபாடு நடைபெறுவதையும், உடம்பெடுத்த உயிர்கள் உருவ வழிபாட்டின் பெருமையை யும், பேற்றினையும் உணர்ந்து வழிபட்டுய்ய வேண்டும் என்றும், இதுவே உயிர்களின் தலையாய கடமையென்றும் சிவாகமங்கள் செப்புகின்றன. சிவாகம முறைப்படிப் பூசைகள், விழாக்கள் நடைபெற வேண்டும் எனவும், அதுவும் சிவாகம முறைப்படி வார்க்கப்பட்ட திருவுருவத்திற்கே செய்யப்பட வேண்டும் எனவும், இத் திருவுருவங்கள் சிவாகம முறைப்படிக் கட்டப்பட்ட திருக்கோவில்களில் எழுந்தருளப்பண்ண வேண்டும் என்றுமியம்புகின்றன.

இப்படியான திருக்கோவில்களில் சிவாகம அனுஷ்டான நெறிமுறை அணுப்பிரமாணம் சிறிதேனும், வழுவாத சிவாச்சாரியர்களே சிவபூசை விழாக்கள் செய்யும் தகுதி பெற்றவர்கள். இப்படியான சிவாச்சாரியர்களின் மந்திர உச்சாடணங் களுக்கியைந்து திருவுருவங்களில் பிரசன்னமாகிப் பூசை, நைவேத்தியங்களையேற்றுக் கொள்வார். அப்பொழுது காட்டப் படும் தீபஒளியில் சுவாமியை உயிர்கள் வணங்கி, அருள் பெற்றுய்யும்.

இந்த நேரங்களில் மட்டுமே சுவாமியங்குப் பிரசன்னம். ஆனால், ஞானியுடனோவென்னில் சுவாமியென்றும் பிரசன்னம், இதை மானுடனறிய வாய்ப்பில்லை. எனினும் இவர்களில் நல்வினைப் பயனின் தூண்டுதலால் தர்சித்து வணங்கும் பேறுபெற்ற புண்ணியர்கள் புண்ணியரே.

சிவஞானிகளைக் காணல், அவர்சொற் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பன எம்போலிகளை உய்யக் கொள்ளும் சைவ சித்தாந்த பெருநெறிகளாகும். சைவசித்தாந்தம் இந்தச் சிவஞானிகளே சைவசமயத்தில் முதன்மை பெற்றவர்கள் என்று முழங்கும். இவர்களை மால், அயன், இந்திரன் என்பர் வணங்குவர். நவக்கிரகங்கள் இவராணைக் கஞ்சுவன. யமனும், விதியுங்கூட இவர்களுக்கு அடக்கம். இலட்சுமியும் சரஸ்வதியும் இவரேவல் செய்வர். இதையெல்லாம் பரமசிவனும், பார்வதி யம்மையும் பார்த்து மகிழ்ந்திருப்பர். இதெல்லாம் ஞானச் செய்தியாம்.

இது நிற்க, சிவஞானிகள் என்றும் சிவாகம நெறியையே உலகிற்கு போதிப்பர். பதியின் நோக்கம் பசுக்களெல்லாம் தன் திருவடியைப் பெற வேண்டுமென்பதாம். பதியின் திருவடி களைப் பசுக்களுக்குக் காட்டியருளுதலே ஞானிகளின் திருச் செயலாகவிருக்கும். மேலும், திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து மகிமை, தேவார திருவாசகம் ஓதுதல், பெரிய புராணம் கந்தபுராண படனம் இவைகளையும், சைவசித்தாந்த ஞான சாஸ்திரங்களின் உண்மைப் பொருளை உபதேசித்தவர் நம் சுவாமிஜி.

ஞானகுருவின் கடாட்சமின்றிச் சகலராகிய நமக்குச் சிவஞானம் சித்தியாது என்று சிவாகமங்களில் விதிக்கப்பட்ட சைவ சித்தாந்த சாராம்சமான திருவாசகமும், திருவாசகம் வழிவந்த சைவசித்தாந்த ஞானசாஸ்திரங்களும் உணர்த்துவது சிந்திக்கற் பாலதாம். கந்தபுராணம், பெரியபுராணம் ஒரு பந்தியாவது (ஆகக்குறைந்தது) நெறிதவறாது ஓதுவதை நியமமாக்கி நன்னெறி காட்டியவர் நம் ஞானகுரு.

நமது வாழ்நாள் 24 மணி நேரமும் அவமாய் கழிகின்றது. ஒரு சில நிமிடங்களையேனும் எமக்குத் தனு, கரண, புவன, போகங்களையீய்ந்தருளிய கைலாயபதியை நினைவில் தக்க வைக்கும் சிவபுண்ணியத்தினை உணர்த்தியவர் சுவாமிஜியே.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாத ஏணியில் படிப்படியாக ஏறவேண்டுமன்றி மற்றெந்த வழிகளும் உயிர்க்கு நன்மை காட்டா என்பதை எமக்குபதேசித்தவர்.

யோகம் என்பது சிவயோகம். சிவனுடைய திருவுருவத் திருமேனித் தியானித்தல், சித்திகளைத் தாண்டி ஞானானந்த நிட்டையில் கைலாய பதியின் திருவடியினைக் கூடியிருத்தலே சிவயோகங் காட்டும் ஞானநிலை. இந்த ஞான நிலையொன்றே பிறவியிறவி தீர்த்துவைக்கும் அருமருந்தாம். மற்றைய யோகங்கள் பிறவியிறவிக் கடலிலழுத்தும் உண்மையை உணர்த்தியவர்.

பஞ்சாட்சர ஜெபத்தின் வலிமையையும், நால்வரின் மகிமைகளையும் எம்மரமண்டையில் பதிய வைத்தவர் சுவாமிஜி, நால்வர் குருபூசை நடாத்தி, அவர்களின் தேவாரங்கள், புராணமோதும் வழியை நெறிப்படுத்தி குருபூசையின் பெருமை, பெருமையின் அருமையைப் புசிக்க வைத்தவர். சிவாகமங்கள் முழங்கும் சைவசித்தாந்தத்தின் பிரதிபிம்பமாக வாழ்ந்து, அந்தச் சைவசித்தாந்த ஞான நெறியெனும் நீரோட்டத்தின் சுவையையூட்டிய சுவாமிஜிக்கு சைவமக்களாகிய நாமென்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

1940-லிருந்து எத்தனையோ ஆயிரம் உயிர்கட்கு சைவ சித்தாந்த ஞானநெறியைத் தான் பின்பற்றியேயுணர்த்தியவர். சைவ சித்தாந்த ஞானவொளியே வீசி சைவ உலகைக் காத்த பட்டை வைரத்தையின்று நினைவு கூருங்கள். காவளம் நிறைந்து வழிந்த கோவளத் துறையைக் காவளஞ்செய்து சிவப் பெருந்துறையாக்கிய, காரை தீபம் தந்த ஞானதீபமாகிய சுவாமி முருகேசப் பெருமாற்குரிய மதிப்பளிக்கச் சைவ மாந்தர்களே வாருங்கள். பையவே பள்ளியெழுங்கள் அஞ்ஞான இருளகற்றும் ஞானதீபத்தையேற்றுங்கள். இதுதான் எம்மினம், எம் சைவ சமயம், எமது பூமி சிறக்கும் வழியாம்.

சிவம்

# 10

காரைதீபச் சிவபூமியில் திசைவிளங்க, முதல் கோத்திரம். மானாமுதலி கோத்திரமென்ற இருகுடிகளைக் குளக்கோட்டு மகாராஜா இருத்தினார். திசைவிளங்க முதலிகோத்திரமே காரை தீபத்தின்கண் தலைமை நடாத்தி வந்தது. அக்காலத்தே போக்குவரவு கப்பல் மூலமே நடைபெற்று வந்தது. காரை தீபத் துறைமுகம் திசைவிளங்க முதலி கோத்திரத்தார் வசமே இருந்தது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள தொடர்பு உறவு வழியாகவும், வியாபார முறையாலும் நடைபெற்று வந்தது. சுவாமிஜி காலத்தில் சிறப்புற்றோங்கியது.

முடிசூடா மன்னராய் வாழ்ந்தவர்கள் இக்கோத்திரத்தார். இந்தவிரு கோத்திரத்தார்க்குக் குடிமை செய்ய (கூலிவேலை) குளக்கோட்டு மகாராஜாவால் ஏனைய தொழிலாளர்களும் பின்பு குடியேற்றப்பட்டவரே. திசைவிளங்க முதலிகோத்திரம், மானா முதலிகோத்திரமிரண்டும் தொடர்புடையவர்களாய் விளங்கிய சாதிமான்கள். இந்த முறையில் சுவாமிஜியும், களபூமி நகைக்கடை அம்பிகை பாகனுக்கும் தொடர்பு இருந்து வந்தது. சுவாமிஜி 1976-ல் (வைகாசி) சமாதியடைந்த பொழுது சமாதியலுவல்கள் நடைபெறுவதற்குதவியவர்கள் பலராவர்.

வெளிச்ச வீட்டுவளவிலிருந்து குடிபெயர்ந்ததற்குக் காரணங்கள் பலவாம். வெளிச்ச வீட்டு வளவு எந்நேரமும் இராணுவத் தலையீடு நடைபெறுவதாகவிருந்ததும், வெளிச்ச வீட்டுவளவு தான் சமாதியடைய ஏற்றதல்லவென்பதுமே மிக முக்கிய காரணிகள். இராணுவத்தலையீட்டைக் கூட சுவாமிஜியால் தடுக்க முடியும். ஆனாலும், தனக்கோர் ஆண்சீடப்பிள்ளை (துறவற, நெறியில் நிற்கும்) இல்லை யென்பதே முக்கிய காரணம். ஆண்சீடரால் மட்டுமே வெளிச்ச வீட்டையலிலுள்ளவளவில் தான் சமாதியடைந்தால் வணங்க

முடியுமேயன்றிப் பெண்சீடர்களால் பூசைசெய்து வணங்க முடியாது.

இன்னும் ஊரவர்களுஞ் செல்லமுடியாது என்பதே காரணமாம். எனவே, திரிகாலமுமுணர்ந்த ஞானியாஞ் சுவாமிஜி 1970-ல் கொல்லங்கலட்டிவளவில் குடியேறினார். கொல்லங் கலட்டிவளவு விசாலாட்சியம்மையாருடையது. விசாலாட்சி யம்மையாரின் கணவர் கணேசப்பிள்ளை. இவருக்கு சுவாமிஜி ஆச்சிரமத்துக் கடையொன்று தொடங்கி வைத்தார். சுவாமிஜி போற்றும் அம்பாள் கடையைப் பெருகுமருள் செய்தார். ஈங்குக் குறிப்பிட வேண்டிய விடயம். சுவாமிஜி நயினாதீவு நாகபூசணியம்பாளையும், மதுரை மீனாட்சியம்பாளையும் போற்றித் துதிப்பவர்.

மணித்துவீபம் நாகபூசணியம்பாள் போகத்தையும் மதுரை மீனாட்சியம்பாள், அருட்செல்வத்தையும் வாரிவழங்குந் தெய்வங் களாக அருள்புரிவர். மணித்துவீபம் நாகபூசணியம்பாள் கடாட்சத்தினால் கடையிற் செல்வம் பல்கிப் பெருகியது. இச்செல்வம் ஆச்சிரமத்திற்கேயுரியது. இச்செல்வம் எவரும் பங்கு போடச் சிவானுமதியில்லை. எனினும், இச்செல்வம் பங்கு போடப்பட்டது. இதற்குரிய தண்டனைக்கு எவரும் தப்ப முடியாது. இது நிற்கக் கொல்லங்கலட்டி வளவில் சுவாமி வாழ்ந்து சமாதியடைந்த காரணம் இதுவுமொன்றாகும்.

சமாதிக் கிரியைகள் செய்யப் பொன்னாலைப் பிள்ளையார் கோவில் தியாகராஜா பொறுப்பேற்றுச், சைவ சமய விதிப்படி ஒழுங்காக நடைப்படுத்தினார். சைவக் கிரியைகட்குரிய ஆயத்தங்களையவரும், அவருடைய மகன் பண்டிதர் பொன்னம்பலவாணரும் பொறுப்பேற்றனர். சமாதி வைக்கும் கட்டட ஆயத்தங்களைக் கணேச பிள்ளையின் தம்பிமுறையான வைத்தியநாத மாஸ்டர் பொறுப்பேற்று நடாத்தினார். இதற்கு வேண்டிய சீமெந்து, கல், மண், அரிகல்லு வேலையாட்கள் கொண்டுவந்து நடாத்தினார்.

களபூமி அம்பிகைபாகன், Dr. மயூரநாதன் இருவருமே பிரதோஷ காலத்தில் சுவாமிஜி சமாதி நிலை கூடின நேரத்தின் பின்னர் ஆச்சிரமத்திலிருந்து வெளிக்கிளம்பி (இரவு 8 மணி) வெளிவிவகாரங்களிலீடுபட்டனர், சுவாமிஜி சமாதி கூடிய போது சிவகுருநாதனும் அவர் சகோதரி மூவர், Dr. மயூரநாதன் அவர் சகோதரியாகிய அடியேன், பொன்னாலைச் சைவப் பிள்ளைகள் மூவர் என இவ்வளவுபேரும் இருந்தோம். எனவே, ஆச்சிரமத்தம்மாவிற்கு அறிவிக்க வேண்டும் என்பதற்கு மயூரநாதன்தான் தனியே கிளம்பினார்.

ஆச்சிரமப் பொறுப்பாளரான சிவகுருநாதனை எம்முடனிருக்க விட்டார். மயூரநாதன் அம்மா வைத்தியநாதன் மாஸ்டர், பொன்னாலைப் பிள்ளையார் கோயில் தியாகராஜா, சாமியாச்சி யெனும் அடியார், கூட்டத்திற்கறிவிக்க வேண்டியிருந்ததாலும், இவர் தனித்தியங்கவும், புதினங்கூறவும் பயமுடையவராய் களபூமி அம்பிகை பாகனுதவியை வேண்டியும், முன்பு சுவாமிஜியின் ஆணைப்படியும் (அம்பிகைபாகன் உதவி தேவை) மயூரநாதன் அம்பிகைபாகனுடன் சேர்ந்திவரகட்கு அறிவித்த பின்னர் யாழ்ப்பாணஞ் சென்றார்கள்.

சுவாமிஜியின் மூத்த மகன் சச்சிதானத்த சிவம் மட்டக் களப்பிலிருந்து வந்து கொண்டிருந்தார். (சுவாமிஜியைப் பார்க்க) இரண்டாவது மகன் திருநீலகண்ட சிவத்திற்கு அம்பிகை பாகனும், மயூரநாதனும் அறிவித்துவிட்டுச் சுவாமிஜிக்கு வேண்டியவர்களுக்கும் அறிவித்தார்கள். “ஈழநாடு” பத்திரிகைக்கு அறிவித்தல் கொடுத்தபின் விடிந்து அடுத்த தினமுதய மாயிற்று. எனினுமிவர்கள் வெளியல்கள் இன்னும் இருந்தன.

சொந்தக் காணியாயினும் சமாதி வைப்பதற்கு அரசாங்க முறைப்படியே சென்றாகவேண்டுமாகவே அதற்கேற்ற அலுவலர் களைப் பிடித்து முறைப்படியனுமதி பெற்றுவர மாலை நான்கு மணியாகிவிட்டது. முன்பே சைவக்கிரியைகள், சமாதிவைக்கும்

கருவறை ஆயத்தங்கள் தொடங்கியபடியினால் நான்கு மணியளவில் சிவகுருநாதன், மயூரநாதன், செந்தில்நாதன், அம்பிகைபாகன் ஆகிய நால்வருந் தோய்ந்தாசாரமாகச் சுவாமிஜியின் பூஜைகளுக்காயத்தமானார்கள்.

தியாகராஜாக் குருக்களின் தலைமையில் விசாலாட்சி யம்மையார் தலைமைச் சீடப்பெண்மணியினால் அபிடேக ஆராதனை நடாத்தப்பட்டு ஆண்சிடர்களால் அலங்காரம் முடிவடைந்தபின் பெண் சீடர்களாகிய எம்மையும், பிறகு ஆண்சீடர்களையுமழைத்து மலர்தூவி வணங்க வைத்தபின் பொது சனங்களும் வணங்கினர்.

இதன்பின் பிரமரந்திரக் கைலாயஸ்தானமாம் சுவாமிஜியின் உச்சியில் தேங்காய் வைத்தியநாத மாஸ்டரால் உடைக்கப் பட்டது. இதன்பின் சமாதிக் கருவறைக்கு சுவாமிஜியின் திருத்தேகம், சுவாமிஜியின் சந்தான உரிமையாளர்களால் முண்டியடித்து முன்வந்து எடுத்துக்கொண்டு வந்து சமாதிக் கருவறையில் வைக்கப்பட்டது. சுவாமிஜியின் பாவனைப் பொருளாகக் கையில் வீற்றிருந்த செங்கோல் முறிக்கப்பட்டு அவருடன் கருவறையில் வைக்கப்பட்டது.

கதிர்காம முருகனின் அவதாரமாய்த் தோன்றியவர் சுவாமிஜி. ஈங்கு செங்கோல் முறிக்கப்பட்டபோது முருகனின் திருவருளும் முடங்கிவிட்டதென்பது கருத்தாம். பிற்காலத்தில் தமிழினத் திற்கு நடாத்தப்படுமழிவுகளுக்கு முற்சகுனமாக (சூசகமாக) விளங்கிய செயலிதுவாம். எனினும் கதிர்காம முருகனினவதாரமாம் சுவாமிஜி 1970-1976 வரை கொல்லங்கலட்டியில் வாழ்ந்த காலத்திலோர் தமிழர்க்கனுக்கிரகம் செய்யப் போவதையும் சூசகமாயறிவித்தார். அஃதாவது முருகனின் அவதாரமாம் ‘‘சம்பந்தன் மீண்டும் பிறப்பான், சைவத்தையும் சைவத் தமிழரையுங் காத்தருள்வான்’’ என்றுங் கூறியருளினார். ஈங்கு தான் வந்த அலுவல் முடிந்ததையும் எமக்கு சூசகமாயறிவித்து வைத்தார்.

இனிச் சமாதிக்கிரியைகட்கு வருவோம். சமாதிக் கருவறையில் வைக்கப்பட்ட திருத்தேகம் திருநீற்றினால் மூடப்பட்டது. ஈங்குப் பொது சனங்களிடமும் திருநீறு வேண்டப்பட்டது. புண்ணியஞ் செய்த ஊர்மக்கள் திருநீறுங்கொடுத்தனர். இதன்மேல் உப்பு மூட்டை மூட்டையாகக் கொட்டப்பட்டது. இத்துடன் எமக்கங்கு நிற்க அனுமதி தரப்படாததால் நாம் விலகிவிட்டோம். கருவறை மூடப்பட்டதும் சமாதி மேலபிஷேகம் செய்யப்பட்டு (சிரசுத்தானம்) நைவேத்திய, பூசை அர்ச்சனை, கற்பூரதீபம் நிறைவடைந்து அடியார் கூட்டம் உணவுண்டு படுத்துறங்கச் சாமமாகியது.

இங்ஙனம் சுவாமிஜியின் சமாதித் திருவிழா பலருடன் கூடியினிது நிறைவேறியது. இத்திருவிழாவைத் தர்சித்து மாந்தர்கள் திருவருள் கூடினரென்பது ஞானச்செய்தியாம். ஈங்கு முருகப்பெருமானை மானிட வடிவிற்கண்டு தர்சித்த காரைதீப மாந்தர்கள் சமாதியுற்சவம் தர்சித்த திருவருள், இப்பிறவிக்கன்மம் புசித்திறந்தபின் இவ்வுயிர்களைக் கைதூக்கி விடுவது கைலாயபதியினாணைப்படி நடந்தேறும்.

ஈங்குக் கைலாயபதியும் முருகனும் வேறல்ல. உயிர்கட்கு ஞானமீய்வதற்காக எடுத்த அவதாரமே முருக அவதாரமாம். கலியுகத்தில் விளைந்திருந்த அஞ்ஞான விருளகற்றுவதற்காக முருகனவதாரம் நடைபெறுவது சிவானுக்கிரகமாம். எனவே, முருகனவதாரம் இன்னும் நடைபெறும் என்பதை முருகனே சிவவாக்காயருளியிருப்பது சைவமும், சைவத் தமிழரும் செய்த மாபெருந்தவமே. சமாதிக் கோயிலாயிருந்தாலும் ஈங்குப் பல அற்புதங்களைக் கதிர்காம முருகன் காட்டியுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னும் தமிழர் படுந் துன்பங்களைத் திருவுள்ளத்தில் பதித்த கைலாயபதி, தமிழரின் மீட்சியைத் திருவுள்ளம் பதித்து மகாசாத்தாவை தமிழர் தளபதியாகவனுப்பி வைத்தருளினார். இக்காரணமே தளபதியார்

உலகில் மிகச்சிறந்த தளபதியாக விளங்கினார். இத்தளபதிக்கு விநாயகப் பெருமானும், கதிர்காம முருகனுமிருமருங்கிலும் நின்று போர்முகத்திற் துணை செய்தார்கள்.

தளபதி, அவருடன் போராடியவர்கள் யாவரும் பூதவுடனீங்கியபின் குதிரைவீரராகி (இவர்கள் சூரன் போரில் முருகனுடனின்று போர்புரிந்த பூதப்படையினர்) சமாதிக் கோயிலை மூன்றுமுறை வலம்வந்து வணங்கிவிட்டுப் பூவுலகம் விட்டுத் தம்முலகிற்குச் சென்றார்கள். இந்த ஞானச் செய்தி யுலகமறியாததாம். தெய்வம் யாவருக்கும் பொதுவானது. சிவஞானியும் யாவருக்கும் பொதுவானவர். எனவே ஒவ்வொரு சைவத்திருமகன், சைவத்திருமகளும் சமாதிக் கோயிலைப் பேணுங்கடமை பொறுப்புடையவர்களே. ஈங்கு யாவரும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையுடன் செயல்படுவதே முக்கியம். இதுவே தெய்வநீதியாம்.

சிவம்

# 11

கோவளப்பெருந்துறையைச் சிவப்பெருந்துறையாக்கிய சிவஞானதீபமாம் சுவாமி முருகேசப் பெருமான் நான்கு குடும்பத்தாருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்தவர். இவர்களுள் முக்கிய தொடர்பு கொண்டவர் விசாலாட்சி யம்மையார் குடும்பம் காரைக்காலம்மை போல இல்லற வாழ்வில் ஈடுபட்டபின் துறவறம் மேற்கொண்டவர். தாய்வழி நுழைந்த பெண்கள் மூவரும் துணிந்து நற்துறவறம் பூண்டவர்கள். ஆச்சிரமப் பொறுப்பேற்று நடத்தியவர்கள். இவர்களுடன் சகோதரன் சிவகுருநாதனும் இணைந்து கொண்டவர். இவர்களுடைய பொறுப்பில் ஆச்சிரமப் பூசைகள், சுவாமி, சுவாமிஜியின் பாடல்கள், சுவாமிஜியின் வேறு முக்கிய பொருட்களும் பேணப்பட்டு வருகின்றன. சுவாமிஜி ஆச்சிரமத்தையழித்துவிட்டே கொல்லங்கலட்டிக்கு சென்றவர்.

ஒரு சிவஞானியால் ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிரமம் இன்னொரு சிவஞானியினால் மட்டுமே நடாத்த முடியும். அஞ்ஞானமிகு மானுடனால் நடாத்த முடியாதென்பதே காரணம். சுவாமிஜி வெளிச்சவீட்டு ஆச்சிரமம் பிடுங்கப்பட்டபின் அங்கொரு பலகையில் ''உலகப் பிரசித்திபெற்ற சிவன்கோவில், குருகுலம் வைத்தியாலயம் மானுடன் தீமையாலழிந்து கிடக்கும் நிலை'' என்னும் வாசகங்களெழுதி மாட்டி வைத்தபின்பே கொல்லங்கலட்டியில் வசித்துவந்தார்.

1971-ம் ஆண்டு அடியேனை ஆச்சிரமத்திற்கு அழைத்த போது முதலில் அடியேனுக்குக் காட்டியவர் சுவாமிஜியே. (இவ்வாசகங்களில் சிறிது மாற்றமிருந்தாலும் பிழையைப் பொறுத்துக் கொள்வது கடனாம்) ஆணவமாம் சூரனுக்கே ஞானங்(சிறிது) கொடுத்துத் தனது விஸ்வரூபங்காட்டியருளிய முருகன், சூரன்போர் முடிவில் கோழியுமயிலுமாய் நின்றும் ஆங்காரமடங்காத சூரனை ஞானநோக்கினாலடக்கிய முருகப்

பெருமான், மனமுவந்தங்கோர் சீடன் துறவறமேற்கொண்டிருந்தால் ஞானத்தையள்ளியூட்டுவற்குத் தயாராயிருந்த முருகப் பெருமானை மானுடரால் அறிய முடியவில்லையென்பதே ஞானச் செய்தியாம். மீண்டும் சம்பந்த பெருமானாய்ப் பிறக்க வேண்டிய கைலாய பதியினாணையீங்குக் காத்துக் கொண்டிருப்பதால், சுவாமிஜி தனது அவதார நோக்கையீடேற்றிய பணியுடன் கைலை செல்லல் தேவையாயிற்று.

இது நிற்ப விசாலாட்சியம்மையாரின் பிள்ளைகளுடன் பொன்னாலைச் சைவப் பெண்களும் (துறவிகள்) சுவாமியின் சிவபூசை, குருபூசை ஆன்மார்த்த பூசைகளைத் தொடர்ந்து தாமிருக்குமிடத்திற்செய்து வருகிறார்கள். சுவாமிஜி நியமித்த காலம் வரை விசாலாட்சியம்மையார் குடும்பம் நடாத்தி வரும்.

சிவம்

# 12

காரை தீபத்தினிரு கண்களாய் விளங்கியது திசைவிளங்க முதலி கோத்திரம், மானாமுதலி கோத்திரம், திசைவிளங்க முதலி கோத்திரத்தில் உதித்தவர் சுவாமிஜி. மானாமுதலி கோத்திரத்தில் வந்தவர் அம்பிகைபாகன். சுவாமிஜி அம்பிகை பாகனுடன் தொடர்பு வைத்திருந்தமை ஏற்கனவே கூறப் பட்டதாம். சுவாமிஜி எந்தக் காரியத்தைச் செய்தாலும். அதன் பின்னணியிற் பல காரணங்களிருக்கும், காரை தீபத்தில் ஞானதீபமணையாமற் பாதுகாக்கும் பொறுப்பு அம்பிகை பாகன் குடும்பத்திற்குவிடப்பட்டதாம்.

சுவாமிஜியின் திருவருள் இக்குடும்பத்தை முன்னெடுத்துச் செல்வதால் சமாதிக் கோயிலில் தம்மாலியன்றவளவு ஞான தீபமேற்றிவருகிறார்கள். சுவாமிஜி காரைதீபத்தில் மூன்று பாடசாலைகள் தொடங்கி வைத்தமை முன்பு கூறப்பட்டதாம். களபூமியிலிருக்கும் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தில் வைகாசிப் பரணியில் சுவாமிஜியின் குருபூசை நடாத்தி வருகிறார்கள். இது மிகவுஞ்சிறந்த தொண்டும், குருவாக்கிய பரிபாலனமுமாம்.

சுவாமிஜி கொல்லங்கலட்டியிலிருந்து ஆச்சிரம பரிபாலனஞ் செய்த காலத்தில் குடும்பத்திற்கு முன்னுரிமை கொடுத்து பூசைக்கு வேண்டிய ஆயத்தங்களையும் கொடுத்தருள் செய்தவர். சுவாமிஜி தன்னுடனிருந்த சிவகுருநாதன், மயூரநாதன், செந்திநாதனாகிய மூவருக்கும் உத்தியோகங் கிடைத்தபோது அம்பிகைபாகனே அவர்களைக் கொண்டுபோய் சேர்க்கும்படி யனுப்பி வைத்தார். இன்னும் சிவகுருநாதனினுயிரை மூன்று முறை காத்து வைத்தவர் அம்பிகைபாகனே. மேலேகூறிய இருமுதலி கோத்திரத்தாரே காரைதீபத்தின் பெரியோர்கள். திசைவிளங்க முதலி கோத்திரத்தார் முடிசூடாமன்னர்களாகத் திகழ்ந்தவர்கள்.

மானாமுதலி கோத்திரத்தார், திசைவிளங்கமுதலி கோத்திரத்தார் சுவாமிஜியின் வழியினின்று சுவாமிஜி ஆரம்பித்து வைத்த மூன்று பாடசாலைகளான சுந்தரமூர்த்தி வித்தியாலயம், மெய்கண்டான் பாடசாலை, மறைஞான சம்பந்தர் பாடசாலை மூன்றிலும் சுவாமிஜியின் குருபூசையை வழிநடத்துவது அவர்கள் கடமையாம். காரைதீபமோ புண்ணிய பூமியாம். அதனுள் சுவாமிஜி பிறந்து வளர்ந்துலாவிய புண்ணிய பூமியைப் பேணுவது முதலி கோத்திரத்தாரின் கடமை யுமுரிமையுமாம்.

சிவம்

# 13

சைவசித்தாந்த தேசிகனாகி முன்னின்று பார்வையென முன்பற்றிப் பிடித்து Fiscal குடும்பத்தைக் கைதூக்கிவிட்டவர் கோவளப் பெருந்துறையைச் சிவப்பெருந்துறையாக்கிய ஆலவாய் குருமணிசுவாமி முருகேசப் பெருமான். எத்தனையோ கோடி கோடிப் பிறவிகளிலேயாற்றிய தவத்தினால் Fiscal குடும்பம் சுவாமிஜியைத் தர்சித்தருள் பெற்றது; பெறுகின்றது; இனியும் பெற்றுக் கொள்ளும் துரையப்பாவும் சுவாமிஜியும் உத்தியோக காலத்திலிருந்தே தொடர்பு பூண்டவர்கள்.

பிற்காலத்தில் துறவுபூண்டகாலத்தில், சிவயோக காலத்தில், தனித்திரு, பசித்திரு, விழித்திரு எனுந்தவயோக காலத்தில் துரையப்பா வீட்டிற்றங்கியிருந்தவர். துரையப்பா, துணைவி கனகம்மா, பிள்ளைகள் (குறிப்பாகப் பெண் பிள்ளைகள்) எல்லோரும் சுவாமிஜியின் அருள் பெற்றவர்கள். இவர்கள் முற்பிறவிகளிற்செய்த தவமெனுந் திரோதான சக்தியினருள், அருட்சத்தி வடிவாம் ஞானாசிரியரின்பாலீர்த்து வைத்த தென்பது ஞானச் செய்தியாம்.

பொதுவாக இவர்கள் தெய்வமென போற்றியபடியினால், பிற்காலத்திற்றமது பிள்ளைகளுக்குந் தெய்வமென அறிய வைத்துப் போற்றவைத்த பெருமை இவர்களைச் சாரும். மூன்றாந் தலைமுறையினரான எமக்கு சுவாமிஜி, சுவாமிஜி யின் ஆச்சிரமம், அங்கு வாழ்ந்த பெண்துறவிகள் பற்றிய செய்திகளையூட்டி வளர்த்த பெருமை என் முன்னோர்க் குரியதாம். இந்தத் தொடர்புதான் நாயடியேனை சுவாமி யழைத்துத் தனது ஆச்சிரமத்தில் இருக்கும்படிப் பணித்ததற்கும் காரணமாயது.

1971-ல் அழைத்து அருணோக்கில் தீர்த்தாட்டி, ஞான மேகமாய் வந்து, சிவஞானமழையாய்ப் பொழிந்து, திருவடி

ஞானமூட்டி வளர்த்தருளினார். Fiscal துரையப்பா, குடும்பத்திற்குக் கொடுத்தருளிய திருவருட்பணியின் ஒருவடிவமே இந்நூலாம், எழுதித் தில்லை நடராஜர் திருவடியில் வைக்கும்படிக் குருவின் கட்டளை. நாயடியேனை அன்றும், இன்றும் என்றும் என்னுடனாய், ஒன்றாய், வேறாய் நின்றுவழிப்படுத்தும் ஞானகுருவின் திருவருளே துணை செய்யும்.

சிவம்

# 14

சைவசித்தாந்த ஞான தேசிகராம் சுவாமிஜிக்கு மிகமிக வேண்டியவர்களாயிருந்தவர்கள் தில்லையம்மா என்பவரின் குடும்பம். இக்குடும்பத்தை மிகவும் போற்றித் தனக்கும் தொடர் கொண்டும் அக்குடும்பத் தோன்றல்களையும் பேணி வந்தவர் சுவாமிஜி. சைவ சமயத்தைத் தாங்கும் சிவாகம நெறியையுயிராகப் போற்றுபவர் சுவாமிஜி. சிவாகமங்கள் வர்ணாச்சிரம தர்மத்தைக் கூறுவனவாம். சிவபுண்ணியம், புண்ணியம், பாவம் என்பவற்றுக்கமையவே வர்ணாச்சிரம மமையும். இந்த வழியில் சிவ புண்ணியத்தின் பாற்பட்டவர்கள் சைவர்கள்.

இவர்களே கோயிற்பூசை நடாத்திவந்தவர்கள். இவர்கள் சிவத்துடன் சம்பந்தம் உடையவரென்பதால் இப்பெயர் கொண்டவர்கள். கோயிற்பூசை செய்யாத சைவர்களும் புண்ணியர்களே. எனினும், தமது குலஆசாரந் தவறாதிருப்பதில் கவனஞ் செலுத்தி வந்தனர். எனவே, சைவர்களை நன்கு மதித்து வந்தவர் சுவாமிஜி. துறைமுகம் கப்பற் கொம்பனி நடாத்தி வருங்காலத்திலிருந்தே சுவாமிஜி தில்லையம்மா குடும்பத்துடன் தொடர்பு பூண்டு வந்தார்.

தில்லையம்மாவைத் தொடர்ந்து அவர் பெண் (ஒரே பெண்) சிவாமியம்மாவும், சிவகாமியம்மாவின் பிள்ளைகளும் அவர்களைத் தொடர்ந்து பேரப்பிள்ளைகளும் பின் பூட்டப் பிள்ளைகளும்(மூவர்) சுவாமிஜியுடன் தொடர்புபூண்டு வாழ்ந்த வர்கள். சிவகாமியம்மாவின் கடைசிமகளான பார்வதியம்மை யாரும், சிவகாமியம்மாவின் மூத்த பெண் காமாட்சியம்மாவின் மூத்த பெண் மங்கையர்க்கரசியம்மாவும், கடைசிப் பெண் வடிவாம்பிகையம்மாவும் (இவர்கள் மூவரும்) ஆன்மலாபந்தேடி சுவாமிஜியின் ஆச்சிரமத்துத் துறவியானவர்கள்.

தில்லையம்மாவின் குடும்பம் சிவபுண்ணியமிக்க குடும்ப மாதலாலும், சுவாமிஜியின் சிவவாக்கின்படி திருஞானசம்பந்த பிள்ளை தோன்றும் (மீண்டும்) சிவபுண்ணியமும் பெற்றுள்ள தாலும் சுவாமிஜியின் திருவருணோக்கின் வசப்பட்டிருந்தது; வசப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலும் உண்டெனபதும் உலக மறியாத ஞானச் செய்தியாம். முன்பு குறிப்பிட்ட மூன்று குடும்பங்களுடன் இக்குடும்பத்திற்குத் தொடர்பு ஏற்படுத்தி வைத்ததும் சுவாமிஜியே.

சிவபுண்ணியமிகுத்து, சிவபுண்ணிய காலங்கைகூடி வரும்போது கதிர்காம முருகன் ஈழத்தமிழர்க்காக அவதரிப்பது சிவவாக்காந் தன்மையால், தில்லையம்மாவின் வம்சாவளியில் வந்தவர்கள் சிவாகமங்கள் தாங்கும் மேன்மைகொள் சைவ நீதியின் வழி நடந்து, சம்பந்தப் பெருமானின் வரவை நோக்கித் தவமியற்ற வேண்டுமென்பது சுவாமிஜியின் ஆலோசனை யாகும். இதைக் கடைப்பிடித்து, சுவாமிஜியின் சிவவாக்கு பரிபாலனம் பண்ணியொழுகி வருங்காலத்தில், சைவ இலங்கையில் ஞானபானுவாய் சம்பந்தன் தோன்றி அருட் கடாட்சம் வீசுவது சத்தியமாம். இக்குறிப்பு தில்லையம்மாவின் வம்சாவளியினர்க்கு உரித்தாகட்டும்.

சிவம்

''சிவமே குரு குருவே சிவம்'' என்னும் அருமந்திரத்தை யுபதேசித்து, அருணோக்காலிருள் நீக்கிச் சிவஞானவ முதூட்டியந்த உபதேசத்தினரும் பொருளையுணர்த்தி, சிவானுபவவாயிலாயனுபவித்து உணரவைத்த ஞானதேசிகன் திருவருட் பணிப்பினால் அவரருள் கொண்டெழுதப்பட்ட நூலாம். சிவாகமங்கடாங்கும் சைவ சமயத்தை வளர்க்கும் பொருட்டே சிவஞான தேசிகனாம் சுவாமிஜி, கதிர்காம முருகனவதாரமாம் சுவாமிஜி ஆலவாய் ஆச்சிரமத்தை நிறுவியவர்.

இந்த ஆச்சிரமம் தனிமனித சுகத்திற்கல்லவென்பதை ஒவ்வொரு மானுடனும் உணர்ந்து சிந்திக்கக்கடவர். எனவே தான் முன்பு குறிப்பிட்ட நான்கு குடும்பங்களையும் பாதுகாத்துத் தொடர்பு கொண்டு பேணிவளர்த்தவர் என்பதையும் சிந்திக்க வேண்டுகின்றேன். தனிமரம் தோப்பாகாது என்பது பழமொழி. தனித்து நின்றெவரும் சாதிப்பது கஷ்டமே.

கதிர்காம முருகப் பெருமானை முன்னிட்டு அவர் திருவருளை நாடி, வேண்டி யாவரும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து தனிமனித விருப்பு வெறுப்புகளையொதுக்கி வைத்து விட்டுக் குலகுரு, உலகத்தின் சிவஞானகுரு, கண்கண்ட தெய்வம், கதிர்காம முருகனுக்குச் செய்கின்ற ஆத்மார்த்த தொண்டும் எம்குலம், எம்சமயம், எம் நாடு சிறக்கும் வழி யெனத் தெளிந்தும் என்னினிய சைவத் தமிழ்ச் சகோதரர்களே திரண்டு வாருங்கள். யாவரும் மனது வைத்தால் ஒளி தோன்றுங்காலம் தூரமில்லை.

சிவம்

நன்றி வணக்கம்

**மேருபுத்திரி**